# வலு

ஜூலை - செப்ரெம்பர் 2014 காலாண்டிதழ்   இதழ் - 3

ரூபா 80
இறுவெட்டுடன்
ரூபா 100



## கேட்டலும் கேட்டல் குறைபாடுகளும்

## முயன்றால் முடியும்


வெளியீடு

கருவி

மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ் 03

# வலு

ஜூலை - செப்ரெம்பர் 2014

**மாற்றுத்திறனாளிகள் தொடர்பான தகவல்களையும் ஆக்கங்களையும் தாங்கி வெளிவரும் காலாண்டு சஞ்சிகை**

பிரதம ஆசிரியர்
திரு.க.தர்மசேகரம்

ஆசிரியர் குழு
திரு. நா. கீதாகிருஷ்ணன்
திரு. செ.பிரிந்தாபரன்
திரு. இ.தனஞ்சயன்
திரு.யோ.சுதாகரன்
திரு.து.சற்குணராசா
திரு.ஆ.பரமேஸ்வரன்
திருமதி ப.கணேஸ்

**வெளியீடு**

கருவி
மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம்,
இல.1155/15, அருளம்பலம் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

Email:
karuvi.org@gmail.com
web: karuvi.org

தொடர்புகளுக்கு:
நா.கீதாகிருஷ்ணன் - 0752275205
ஆ.பரமேஸ்வரன் - 0779791366

## உள்ளே....


| | |
|---|---|
| 1 .காலத்தின் கடமை | 02 |
| 2. கேட்டலும் கேட்டல் குறைபாடும் | 03 |
| 3. இலங்கையில் விசேட கல்வி | 06 |
| 4. வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள் | 10 |
| 5. சிறுகதை | 18 |
| 6. செய்திச்சாளரம் | 21 |
| 7. முற்றத்து மல்லிகை | 23 |
| 8. எழுதுங்கள் வெல்லுங்கள் | 29 |
| 9. எண்ணக்கிண்ணம் | 31 |
| 10. வலுவிடம் கேளுங்கள் | 32 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் கடமை

சமூக அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்வதில் பெண்களின் வகிபாகம் என்பது பிரதானமான இடத்தைக் கொண்டிருப்பது தற்போது நன்கு உணரப்படுவதாகவும், முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருக்கின்றது. அரசியல் சமூக கலை கலாசார பொருளாதார நிலைகளில் பெண்கள் வழங்குகின்ற சேவைகள் தவிர்க்கப்பட முடியாதவையாக இருக்கின்றன. இப்படியான சூழமைவு பெண்கள் தொடர்பான கவனத்தினை அதிகரிப்பதாக உள்ளது.

பொதுவாக பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக சமூக மட்டங்களிலும் உலகளாவிய மட்டத்திலும் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன. வலுவிழப்புடன் கூடிய நபர்களாக இருக்கின்ற பெண்கள் எதிர்கொள்கின்ற சிக்கல்கள் இன்னும் பெரியளவிலான கவனயீர்ப்பைப் பெறவில்லை என்றே கூற வேண்டும். இயல்பான வாழ்வியல் ஓட்டத்திற்குள் இருக்கும் ஒரு பெண் எதிர்கொள்கின்ற சவால்களைக் காட்டிலும் வலுவிழந்த பெண்கள் சந்திக்கின்ற சவால்கள் அதிகமானவை என்பது வெளிப்படையானதும், யதார்த்தமானதுமாகும்.

வலுவிழப்புடன் கூடிய பெண்கள் உடல் உள ரீதியாக பாதிப்புகளுக்கு உள்ளாகும் ஏதுநிலை அதிகமாக இருப்பதோடு சமூகபொருளாதார ரீதியிலும் பாதிப்புக்களை சந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

வலுவிழந்த பெண்களின் பாதுகாப்பு, மற்றும் அபிவிருத்தி தொடர்பான விழிப்புணர்வு, குடும்ப சமூக மட்டங்களிலும், சவால்களை எதிர்கொள்ளும் இத்தகைய பெண்கள் மட்டத்திலும் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியம் ஆகும். வலுவிழந்த பெண்கள் சவால்களை எதிர்கொள்வதற்கும் தங்களை காத்துக்கொள்வதற்கும் அவர்களது தாங்கு திறனை அதிகரித்துக் கொள்வதற்கும் சமூக மட்டத்தில் உள்ள அனைத்துத் தரப்பினராலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்போது தான் நிலைத்தன்மையான பயனுறுதி உள்ள சமூக அபிவிருத்தி சாத்தியமாகும்.

நன்றி

**பிரதம ஆசிரியர்**
**திரு க.தர்மசேகரம்.**

அன்பார்ந்த வாசக நெஞ்சங்களே!

வலு என்ற இச் சஞ்சிகை உங்களுக்கானதே. எனவே உங்களுக்குள் புதைந்து கிடக்கும் திறமைகளை இச் சஞ்சிகை மூலமாக வெளிக்கொணருங்கள். மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான கேள்விகள் மற்றும் உங்களுக்கு இருக்கும் சந்தேகங்களை வலுவிடம் கேளுங்கள் பகுதிக்கு எழுதி அனுப்புங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டலும் கேட்டல் குறைபாடும்

உலகில் வாழும் மக்களில் சிலர் ஏதோ ஒரு வகையில் உடல் ரீதியாகவோ, அல்லது உளரீதியாகவோ பாதிப்புற்றவர்களாக காணப்படுகின்றனர். இவர்களைத்தான் நாம் விசேட தேவையுடையோர் அல் லது மாற்றுத்திறனாளிகள் என அழைக்கின் றோம். இவ்வாறான மாற்றுத்திறனாளிக ளில் ஒரு பகுதியினர் கேட்டல் குறைபாடு உடையவர்கள்.

மனிதனின் அன்றாட செயற்பாடுக ளிற்கு அவனது அங்கங்கள் பெரிதும் துணை புரிகின்றன. அந்த வகையில் செவியின் ஊடான செவிமடுத்தல் செயற் பாடும் முக்கிய இடம் வகிக்கின்றது. இதனூடாக வாழ்க்கை செயற்பாடுகளின் போது மற்றவர்களுடன் இலகுவாகவும், வினைத்திறனுடனும் மனிதன் தனது கருத்துக்களைப் பரிமாறிக்கொள்கின்றான். இக் கேட்டல் செயற்பாடிற்கு துணை புரி யும் செவியின் அமைப்பு பற்றி சிறிது நோக்குவோம்.




செவியானது வெளிச்செவி, நடுச் செவி, உட்செவி என பிரதானமான 3 பகு திகளைக் கொண்டது. உடலின் வெளிப் பகுதியில் காணப்படும். வெளிச் செவி யானது கால்வாயினையும் அசையக் கூடிய செவிமடலினையும் கொண்டு உடலின் வெளிபபுறத்தில் காணப்படும். வெளிச் செவி குழாயானது ஒலியை, செவிப்பறை வரை கொண்டு செல்கின்றது. வெளிவாரி கேட்டல் குழாயின் மூன்றில் இரண்டு பகுதி காடிலேஷ்சினால் உருவாக்கப்பட் டுள்ளது.

எஞ்சிய மூன்றில் ஒரு பகுதி மண்டை ஓட்டைச் சேர்ந்த எலும்புகளினால் சூழப் பட்டு உள்ளது நடுச் செவியானது செவிப் பறை நடுச்செவிக்குழாய் , ஊத் தேக்கியா வின் குழல், பட்டையுரு என்பு , சம்மட்டி யுரு என்பு , வட்டத்தொளை என்பு ஆகி யவற்றை உள்ளடக்கியது. நடுச்செவியா னது ஒலியின் அழுத்தத்தை உட்செவிவரை கொண்டு செல்கின்றது. உட்செவியானது மண்டையோட்டில் உள்ளே மிகவும் நூட் சுமமான முறையில் குழல்களைக் கொண்டு அமைந்துள்ளது. என்புகளினால்சூழப்பட்ட சுருள், நத்தையை ஒத்து அமைந்திருக்கும் . இது நடுக்காதில் இருந்து கிடைக்கும் இயந்திர சக்தி மெல் லிய சவ்வை அதிரச் செய்து மூளைக்கு அனுப்புகின்றது. உடலின் சம நிலையை யும் காக்கின்றது.

**கேட்டல் செயற்பாடு எவ்வாறு நிகழ்கின்றது என பார்ப்போம்.**

கேட்டல் என்பது வெளிச்செவிச் சோனையில் இருந்து ஆரம்பமாகின்றது. வெளிச்செவிச்சோனையை அடைந்த ஒலி அலைகள் செவிக்கால்வாயூடாக நடுச் செவியை அடைகின்றது.

செவிப்பறையில் காணப்படும் சம் மட்டியுரு, பட்டையுரு, ஏந்தியுரு என்புகள செவிப்பறை அதிரும் போது ஒலியைப் பெரிதாக்கி உட்செவிக்கு அனுப்புகின் றன. உட்செவி நத்தையுருவில் உள்ளது. இதில் திரவம் நிரப்பப்பட்டுள்ளது. அத்துடன் ஆயிரக்கணக்கான மெல்லிய மயிர்க்கலன்கள் உள்ளன. அதிர்வுகள் திரவமூடாக செல்லும் போது மயிர்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலன்கள் ஒலிஅலைகளை மின் நரம்பு கணத்தாக்கமாக மாற்றி அவற்றைச் செவி நரம்புக்கு அனுப்புகின்றன. இந்த நரம்புகள் உட்செவியினையும் மூளையினையும் இணைப்பதனால் இந்த கணத்தாக்கங்கள் மூளையை அடையும். போது அவை ஒலிகளாக வியாக்கியானப்படுத்துகின்றன. இது நீண்ட செயன்முறை போல்தோன்றினாலும் ஒரு நொடியில் நடைபெற்று விடுகின்றது.

### அடுத்து கேட்டல் குறைபாடு எவ்வாறு ஏற்படுகின்றது எனப் பார்ப்போம்

வெளிச்செவியில் அல்லது நடுச் செவியில் ஏற்படும் தடை, தடங்கல், சேதம் என்பவற்றால் கடத்தல் குறைபாடு ஏற்படும் உணர்வு நரம்புக்குறைபாடு , கலப்புக்கேட்டல் குறைபாடு என கடத்தல் கேட்டல் குறைபாட்டை வகைப் படுத்தலாம். அடுத்து உட்செவியில் அல்லது கேட்டல் நரம்புத்தொகுதியில் நிகழும் சேதத்தினால் உணர்வுநரம்பு கேட்டல் குறைபாடு ஏற்படுகின்றது. கடத்தல் கேட்டல் குறைபாடு உணர்வு நரம்பு கேட்டல் குறைபாடு என்பவற்றின் பண்புகளின் கலப்பினால் கலப்பு கேட்டல் குறைபாடு ஏற்படுகின்றது. கடத்தல் கேட்டல் குறைபாடு ஒருவரது கேட்டல் திறனை பகுதியளவிலேயே பாதிப்படையச் செய்யும். இக் குறைபாட்டினை மருந்துகள் அல்லது சத்திரசிகிச்சையூடாக குணப்படுத்த முடியும் என மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

உணர்வு நரம்பு கேட்டல் குறைபாடு கடுமையாகும் இடத்து முழுமையாக கேட்கும் திறனை ஒருவர் இழக்க நேரிடும். சிலவேளைகளில் தெளிவாக கேட்க முடியாத நிலை உருவாகும். இதனை மருத்துவர்கள் மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சைகள் மூலம் குணப்படுத்த முடியாது என்கின்றனர். குலப்பு கேட்டல் குறைபாடு மேற்குறிப்பிட்ட இரு கேட்டல் குறைபாட்டு பண்புகளையும் கொண்டுள்ளன.

### செவிப்புலன் இழப்பின் பொதுவான வகைகள்

✪ கடத்தல் சார்ந்த கேட்டல் இழப்பு

இது ஒலி சார் புலனை தடுக்கின்றது. வெளிச்செவியில் இருந்து உட்செவிக்கு ஒலி கடத்தப்படும் போது ஏற்படும் தடையால் இது ஏற்படுகின்றது.

✪ புலன் சார் நரம்பு கேட்டல் இழப்பு

உட்செவியில் அல்லது கேட்டல் நரம் புத்தொகுதியில் ஏற்படும் குறைபாட்டினால் இது ஏற்படுகின்றது. இதன் கார ணமாக உட்செவியில் பல்வேறு பகுதிகள் பாதிக்கப்படலாம். இதனால் சாதாரண ஒலியை கேட்கக் கூடியதாக இருக்கும். ஆனால் உயா ஓசைகள் கேட்க முடியாமல் இருக்கும்.

✪ கலந்த கேட்டல் குறைபாடு

என்பது கடத்தல் மற்றும் புலன் சார் நரம்பு கேட்டல் இழப்பைக் குறிக்கும்.

✪ மத்திய கேட்டல் இழப்பு

இது மத்திய நரம்பு தொகுதியில் ஏற்படும் குறைபாடுகளினால் ஏற்படுகின்றது. இதில் மூளையில் அல்லது மூளைக்கு செல்லும் நரம்புகளில் ஏற்படும் குறைபாடுகளும் உள்ளடங்கும்.

கேட்டல், கேட்டல் குறைபாடு என்பவற்றை அளவீடு செய்வதற்கு நாம் ஓரிரு மாணிகளை பயன்படுத்துகின்றோம்.

கேட்டல் மாணி என்பது சத்தத்தை கட்டுப்படுத்த கூடிய பல்வேறு புள்ளி கணக்குகளின் கீழ் தெளிவான குறியீடுகளை வெளியிடக்கூடிய ஒரு கருவியாகும்.

இதன் மூலம் கேட்டல் வரைபடம் ஒன்றில் தேவையான தரவுகளை குறித்து கொள்ளலாம். மனிதர் ஒரு சத்தத்தின் தீவிர தன்மையினை டெஸிபல் (dB) மூலமேபெற்றுக்கொள்கின்றனர். 125 db


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவுடைய அல்லது அதனை விட கூடிய சத்தம் சாதாரண மனித செவிகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும். 0-120 வரையிலான டெஸிபல் (dB) மட்டத்தின் ஊடாக பல் வேறு இடைவெளிகளில் கேட்டல் அளவு அளவிடப்படும் கணக்கிடுதலை கேட்ஸ் (Hz) அலகின் மூலமே அள விடுவர்.

✪ சாதாரணமாக கேட்க கூடிய நப ரால் அதில் 15dB அல்லது அதற்கு குறைந்த ஒலிகளை வேறுபடுத்த முடியும்.

சாதாரண செவிப்புலன் குறைபாடு கொண்ட நபருக்கு குறைந்தது 15-45 dB மட்ட ஒலிகளைக் கேட்க முடியும். பேச்சு, உரையாடல் சாதாரணமாக இருந்த போதும் அவரால் தூரத்து ஒலிகளைக் கேட்க முடி யாது. ஆரம்பத்தில் அவரின் பேச்சு மற் றும் மொழிவிருத்தி தாமதப்படும். மத்தி மமான செவிப்புலன் குறைபாடு கொண்ட நபருக்கு 45-70dB மட்ட ஒலிகளை கேட்க முடியும் இந்த நிலை ஏற்படின் சாதாரண உரையாடலில் பங்குபற்ற முடியாது பேச்சுத் தெளிவும் தடைப்படும்.

கடுமையான செவிப்புலன் இழப் பைக்கொண்ட நபருக்கு குறைந்தது 70-90dB ஒலிமட்டமே சத்தம் கேட்கும். இப் பிள்ளை சாதாரண உரையாடலில் ஈடுபட முடி யாது. சில வார்த்தைகளை மாத்திரம் கேட்க முடியும். இவர்களுக்கு கேட்டல் உபகரணங்கள் அவசியம். மிகக் கடுமை யான கேட்டல் குறைபாடு கொண்டோ ருக்கு 90dB க்கு மேற்பட்ட ஒலி மட்டமே சத்தம் கேட்கும். மிகக் கூடிய ஒலிக்கு பிள்ளை துலங்க முடியும். ஆனால்தொடர் பாடல் கொள்ள முடியாது.

**1. கேட்டல் பிரச்சினை இருவடிவங்களைக் கொண்டுள்ளது**

- ★ காதிலிருந்து திரவம் வடிதல்
- ★ வெளிக்காதில் தொற்று
- ★ காதில் துர்மணம்
- ★ காதில் பஞ்சு இருத்தல்
- ★ தொடர்ந்து வாயினால் சுவா சித்தல் காதை அடிக்கடி இழுத்தல்

**2. கேட்டல் குறைபாடு**

- ★ தொடர்ச்சியான கவனமின்மை
- ★ ஒலியைவிட அசைவு பற்றிய கூடிய விழிப்புனர்வு
- ★ வாய்மொழி எடுத்துரைப்புக்களை கேட்பதில் சிரமம்
- ★ மற்றவர்கள் பேசும் போது உதடுகளை கவனமாகப் பார்த்தல்
- ★ பேசுபவரை நோக்கி தலையை சரித்தல்
- ★ திரும்பவும் சொல்லுமாறு கேட்டல்
- ★ ஒரே மாதிரியான வார்த்தைகளைக் கேட்கும் போது குழம்புதல்.
- ★ உரையாடல்களில் தன்னையறியாமல் இடைநிறுத்துதல்.
- ★ ஒலியின் மூலத்தை அறிய முடியாமை
- ★ ஒலிப்பதற்கு சிரமம்
- ★ ஒரே மட்டத்திலான குரலோசை
- ★ தன்னையறியாமல் திக்கிப்பேசல்
- ★ மிக மெதுவாகக் கதைத்தல்
- ★ குறைந்த சொற்களஞ்சியம்.
- ★ தாமதித்த மொழி விருத்தியை காட்டுதல்
- ★ பின்னாலிருந்து அழைக்கும் போது துலங்குவதில்லை
- ★ யாரும் கதைக்கும் போது கவனம் செலுத்துவதில்லை.
- ★ ரேடியோ ரீவி முதலியவற்றின் ஒலி யைக் கூட்டுதல்.

இவ்வாறான அறிகுறிகள் ஒருவரி டம் காணப்படும் இடத்து உரியமருத் துவரை அணுகி (END) ஆலோசனை களை அல்லது மருத்துவ சிகிச்சைகளை பெற்றுக்கொள்வது அவசியமா னதாகும். இதன் ஊடாக கேட்டல் குறை பாட் டினை நிவர்த்தி செய்து கொள்ள முடியும்.

குறுமுனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் விசேடகல்வி

மனிதர்களுக்கு ஆரம்ப காலம் முதல் இன்றுவரை பல்வேறு காரணங்களினால் உடல் ஊனம் ஏற்பட்டு வருகின்றது. தொடக்க காலங்களில் உடல் ஊனமுற்றவர்கள் நிலை மிகவும் பரிதாபத்துக்குரிய ஒன்றாவே இருந்தது. ஆனால் காலப் போக்கில் இந்நிலை மாற்றம் அடைந்த தனைக் காணமுடிகின்றது.

இலங்கையில் அக்காலத்தில் இவர்கள் பயனற்றவர்களாகவும் சமூகத்துக்கு மிகுந்த சுமையாகவும் எப்போதும் குடும்பத்தில் அல்லது உறவினர்களின் தயவில் வாழவேண்டியவர்களாகவும் மிகுந்த பரிதாபத்துக்குரியவர்களாகவும் நோக்கப் பட்டனர். ஆரம்பத்தில் இவர்கள் வாழ தகுந்தவர்கள் என சிந்திக்கப்படாமையினால் கல்வி அவர்களுக்கு வழங்கப்படாத நிலையிலே காணப்பட்டது. ஆனால் காலப்போக்கில் நாகரிகம் வளர்கின்றது. சிந்தனை விரிவடைகின்றது. இந்நிலையில் இவர்களை ஒன்றாக அல்லது கூட்டாக ஒரு இடததில் வைத்து அடிப்படை வசதிகளை வழங்கி பராமரிக்கும் நிலை உருவாகின்றது. மாற்றுத்திறனாளிகள் பராமரிக்கப்பட்ட இடத்திலேயே தமது அடிப்படைத் திறன்களை நிறைவேற்றப் பயிற்றப்படுகின் றார்கள். அவர்களுக்கான கல்விக்கு அத்திவாரம் இடப்படுகின்றது. பயிற்சிகளில் கிடைத்த வெற்றிகள் எதிர்பார்த்ததைவிட மிகுந்த பலனளிக்கின்றது. ஒவ்வொரு பராமரிப்பு நிறுவனங்களும் தாம் பராமரிக்கும் விசேட தேவைக்கேற்ப தமது செயற்பாடுகளை திட்டமிடுகின்றன. அதற்கு நேரமும் வகுத்துச் செயற்படுத்துகின்றனர்.

காலப்போக்கில் இவர்களைப் பராமரித்த நிறுவனங்கள் இவர்களைப் பற்றி கற்றோரை தம்மகத்தே கொண்டு தமது செயற்பாடுகளில் உள்ள சரி பிழைகளை ஆராய்கின்றன. அவர்கள் பொதுவாக இவர்களுக்கான செயற்பாடுகளையும் ஆற்ற வேண்டிய பணிகளையும் விசேட தேவைக்கேற்ப வகுக்கின்றன. பாடசாலை முறையின் ஆரம்பத்திற்கு இதுவே அடிப்படையாக அமைந்ததெனலாம்.

இதன்போது இவர்களைப் பராமரிக்கும் நிறுவனம் பாடசாலைகளாக மாற்றம் பெற்றுக்கொள்கின்றன. அதாவது விடுதிப்பாடசாலைகளில் இவர்கள் கற்பது பெற்றோருக்கும் மகிழ்ச்சி தரும் செயல் என அமைகின்றது. இந் நிலை அவர்களின் வெற்றியை பல மடங்கு அதிகரித்தது எனலாம். இதில் பல நன்மைகள் உள்ள ஒரு சூழ்நிலையை பெற்றோர் பெறுகின்றனர். மாணவர்களும் பெறுகின்றனர். இதனாலேயே விசேட தேவையுடையோருககான விடுதிப் பாடசாலைகள் தற்போ தும் நிலைபெற்று நிலைத்துள்ளன எனலாம்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் உடல் ஊனமுற்றவர்களின் கல்வி தொடர்பான சிந்தனை ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தோற்றம் பெற்றதனைக் காண முடிகின்றது. செல்வி.மேரி சாப்மன் என்பவரே இச் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுத்த பெண்மணியாவார்.

இங்கு குறிப்பிடப்படும் காலங்களில் இலங்கை மேலை நாடுகளைப் பின்பற்றி முதன்முதலில் விழிப்புலன் அற்றவர்களுக்கும் செவிப்புலன் அற்றவர்களுக்குமான முதலாவது விடுதிப் பாடசாலையை 1912 ஆம் ஆண்டில் இரத்மலானையில் ஆரம்பித்தது. தமிழ்ப் பிரதேசத்தினைப் பொறுத்தமட்டில் இதற்குப்பின் 1956 ஆம் ஆண்டு கைதடி நவீல்ட் பாடசாலை விழிப்புலன் அற்றவர்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவிப்புலன் அற்றவர்களுக்குமென ஆரம்பிக்கப்பட்டதனைக் காணலாம். இப் பாடசாலைகள் அளப்பரிய சேவையை ஆற்றியமை விசேட கல்வி வரலாறுகளில் மறக் கப்பட முடியாதன.

இவ்வாறு மாற்றுத்திறனாளிகள் தொடர்பாக பல்வேறு ஆர்வம் உள்ளோரும் தொண்டு நிறுவனங்களும் தனிப்பட்ட அணுகுமுறைகளைப் பின்பற்றி பல்வேறு வளர்ச்சி நிலைகளை ஏற்படுத்தினர்.

மாற்றுத்திறனாளிகள் தொடர்பாக மாறிவரும் அணுகுமுறைகள் என்பதனை நாம் கல்வி சீர்திருத்தங்கள் முன்னேற்றங்கள் ஊடாக நோக்குவோம். அவ் வகையில் இவை தொடர்பாக காலத்துக்குக் காலம் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை நோக்குவோமாயின்,

இதன் பின் குறிப்பிடப்படும். மாற்றுத்திறனாளிகள் சார்பாக குறிக்கப்படும் சொற்கள் அந்தந்த ஆண்டுகளில் பயன் படுத்தப்பட்ட சொற் பிரயோகங்களுடன் குறிப்பிடப்படும் என்பதனை கவனத்தில் கொள்ளவேண்டும்.

அரசு தன் அணுகு முறைகளை காட்டிய விதங்களை நோக்குவோமாயின்,

1) 1914 இல் விசேட பாடசாலை களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் சம்பளத்தில்75% அரசு பெறுப்பேற்றுக் கொண்டது.

2) 1943 இல் கன்னங்கரா அறிக்கை யில் பார்வையற்றவர்களாலும் கற்க முடியும் எனவும் இவர்களுக்கு பிரய்ல் மொழியை பயன்படுத்த வேண்டும். எனவும் செவிப்புலன் குன்றியோருக்கு உதட்டு வாசிப்பு முறை மூலம் கற்பிக்க வேண்டும். எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

3) 1961 ஜெயசூரிய அறிக்கை பூரணமான கேட்டல் திறனற்றவர்களுக்கு கேள் கருவிகள் வழங்கப்படல் வேண்டும். தீவிரமான குறைபாடு உடையவர்கள் ஒரு பாடசாலையிலும் மிதமான குறைபாடு உடைய பிள்ளைகள் வேறொரு பாடசாலையிலும் கல்வி கற்கலாம். பிரதேசத்தில் உள்ள குறைபாடு உடைய பிள்ளைகளின் எண்ணிக்கைகளுக்கு ஏற்ப தனியான பாடசாலைகள் அமைக் கப்படுதல் வேண்டும். அவையாவன.

அ. விழிப்புலன் அற்றோர் பாட சாலை
ஆ. செவிப்புலன் அற்றோர் பாட சாலை
இ. அங்கவீனர் பாடசாலை
ஈ. மந்த புத்தி உடையோருக்கான பாடசாலை இவர்களுக்கான பிரயாண வசதி, தங்குமிட வசதி என்பன வழங்கப் படல் வேண்டும். 10 மாணவர் களிற்கு ஒரு ஆசிரியர் என்ற வீதத்தில் அமை தல் வேண்டும்.

4) **1962 ஜீன் கெண்மோர் அறிக்கை**

இவ் அறிக்கையில் விழிப்புலன் அற்றோரின் கல்வி தொடர்பாகவே அதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவையாவன.

அ. விழிப்புலன் அற்ற மாணவர்களை சாதாரண பாடசாலையில் இணைத்து கற்பிக்கலாம்.
ஆ. விழிப்புலன் அற்ற பிள்ளைகளுக்கான வேலைத்திட்டங்களினை ஒன்றிணைத்து அவர்களுக்கு உதவ வேண்டும்.
இ. ஆசிரியருக்கு விசேட பயிற்சி வழங் கப்படவேண்டும்.
ஈ. அதிகாரிகளுக்கு அறிவூட்டுதல் வேண்டும்.
உ. பிள்ளைகளுக்கு உபகரணங்கள், புத்தகங்கள் வழங்கல் வேண்டும்.
ஊ. நீண்ட காலத்திற்கு இந்த வேலைத் திட்டங்களை கொண்டு நடத்துதல் வேண்டும்.
எ. இவர்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) 1967 ஆம் ஆண்டில் வித்தியோதய பல்கலைக்கழகத்தில் விசேட கல்வி தொடர்பான பட்டப்பின் படிப்பு பாட நெறி ஆரம்பிக்கப்பட்டது.

6) 1968 ஆம் ஆண்டு விழிப்புலன் அற்ற 17மாணவர்கள் சாதாரண பாடசாலை யில் கல்வி பயில விசேட வேலைத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

7) 1769 இல் அமைச்சரவை அறிக்கை இலக்கம் 225 இல் குறைபாடு உள்ள பிள்ளைகளிற்கு சாதரண பாடசாலை யில் கல்வி பயிற்றும் திட்டம் ஏற்றுக் கொள் ளப்பட்டது.

8) 1970 இல் மகரகம ஆசிரியர்பயிற்சி காலா சாலையில் விழிப்புலன் அற்ற மாண வர்களின் கல்வி தொடர்பான ஓராண்டு பயிற்சி நெறி ஆசிரியர்களுக்கு அளிக் கப்பட்டது.

9) 1971 இல் கல்வி அமைச்சில் விசேட கல்விப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

10) 1972 ஆம் ஆண்டு இலங்கை ஒரு முகப்படுத்தப்பட்ட அல்லது ஒன்றி ணைந்த கல்வித்திட்டம் ஆரம்பிக்கப் பட்டது. இதன் மூலம் உடல் ஊன முற்ற மாணவர்கள் சாதாரண பாட சாலைகளில் சாதாரண மாணவர்க ளோடு இணைந்து கல்வி கற்க வாய்ப்பு கிட்டியது.

11) 1976 இல் உளக்குறைபாடு உடைய பிள்ளைகளிற்கு கற்பதற்கான பட் டதாரி ஆசிரியர்களுக்கான விசேட டிப்ளோமா கற்கைநெறி கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப் பட்டது.

12) 1979 இல் போகொட பிரேம ரட்ன அறிக்கை வெளிவந்தது. இதில் விசேட கல்வி தொடர்பாகவும் மீத் திறன் உடைய மாணவர்களின் கல்வி தொடர்பாகவும் குறிப்பிடப்பட் டுள்ளதோடு விசேட கல்வி என்றால் என்ன என்பது பற்றியும் விசேட கல்வி தொடர்பான ஸ்தாபனங்கள் எவ்வாறு தமது கடமைகளை ஆற்ற வேண்டும் என்பது பற்றியும் குறிப் பிடப்பட்டுள்ளது.

13) 1981 கல்வி வெள்ளை அறிக்கை இதில் விசேட கல்வி தொடர்பான அதிகாரிகளின் கடமைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

14) 1985 இல் உளக்குறைபாடு உள்ள பிள்ளைகளிற்கு கற்பிப்பதற்கு மகர கம ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் பட்டதாரி ஆசிரியர்களுக்கான விசேட டிப்ளோமா பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் உளக்குறைபாடுடையோருக்கான விசேட டிப்ளோமா பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டது. இவ் ஆண்டி லேயே மகரகமவில் ப்ரய்ல் அச்சகம் ஆரம்பிக்கப்பட்டமையும் ஒரு முக்கி யமான விடயமாகும்.

15) 1988 ஆம் ஆண்டு தேசிய கல்வி நிறுவகத்தில் விசேட கல்விக்கென தனியான ஒரு அலகு ஆரம்பிக்கப் பட்டது.

16) 1994 ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டில் உள்ள சலமென்கார் எனும் இடத்தில் நடைபெற்ற விசேட கல்வி தொடர்பாக முக்கியமான மாநாட் டில் இலங்கையும் கைச்சாத்திட்டது.

17) 1997 புதிய கல்விச் சீர்திருத்தம் பொதுக்கல்விச் சீர்திருத்தம் 1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் தலைப்பில் பொதுக்கல் விக்குரிய ஜனாதிபதியின் துரித செயற்குழு வெளியிட்ட அறிக்கை புத்தகத்தில் 11வது விடையம் சிறப்பு கல்வி பற்றியது ஆகும். இங்கு "விசேடகல்வி" என்பது சிறப்பு கல்வி என மொழிபெயர்க் கப்பட்டுள்ளமை கவனிக் கப்பட வேண்டியதாகும். உள சமூகம் சார்ந்த குறைபாடுகளினால் பாதிக் கப்பட்ட பிள்ளைகளிற்கு உதவும் அணுகு முறைகள் மேற்கொள்ளப் பட வேண்டும் என குறிப்பிடப்பட் டுள்ளது.

இக் கட்டுரையில் "தற்காலம்" என நாம் குறிப்பிட இருப்பது இலங்கை உட் படுத்தல் கல்வி முறையினை ஏற்றுக் கொண்டு சலமன்கார் எனும் இடத்தில் நடைபெற்ற மாநாட்டில் கையெழுத் திட்ட 1994 இல் பிற்பட்ட காலமாகும். இது விசேட தேவையுடையோர் மற்ற வருக்கு சமமான தன்மை பெறும் காலம் என நாம் குறிப்பிடலாம்.

இதன் பின் நாம் எமது தேவைக்காக விசேட தேவை உடையோரை பல்வேறு வகையாக வகைப்படுத்தினாலும் கல்வி ரீதியாக 13 வகைக்குள் நோக்குவோம்.

1. மீத்திறன் உடையோரும் விசேட நிபுணத்துவம் உடையோரும்.
2. கற்றல் இயலுமை உடை யோர் (student with learning disabilities)
3. மொழிதலும் மொழிக்குறைபாடு டையோர். (Speech and language impairment)
4. மொதுவான உளவளர்ச்சி உடையோர் (Mentaly Retarded)
5. உக்கிர மனவெழுச்சி பிரச்சனை (Sever emotional disturbance)
6. பல்வகை இயலாமை உடையோர். (Multiple disabilities)
7. உடலியற் குறைபாடுகள் (Physical impairments)
8. சுகாதாரக் குறைபாடுகள் (Helth impairments)
9. கேட்டல் குறைபாடு (Hear ingimpairment)
10. பார்வைக்குறைபாடுடையோர் (Visual impairments)
11. பூரணமான பார்வைக் குறைபாடு டையோரும் கேட்டல் குறைபாடு டையோரும். (totally deafness and Totally blindness)
12. தற்சிந்தனை (Autism)
13. மூளையில் ஏற்படும் பாதிப்பு (brain injury)

இவர்கள் அனைவரையும் உள்ளடக் கியே நாம் விசேட தேவை உடையோர் என்றும் மிக அண்மைக்காலத்தில் மாற் றுத்திறன் உடையோர், மாற்று ஆற்றல் உள் ளோர் என்ற சொற்பிரயோகங்களினை பயன்படுத்தி வருகின்றோம். பெரும் பாலானவர்கள் இந்த வகைக்குள் உடல் ரீதியான பாதிப்புள்ளவர்கள் மட்டுமே அடக்கப்படுகின்றனர் என புரிந்து வைத் துள்ள தன்மை பிழையானதொன்று அவர் கள் மட்டும். விசேட தேவை உள்ளோர் வகைக்குள் அடங்காமல் ஏனைய வகை யானோரினையும் நாம் இவ்வாறு நோக்கு கின்றோம் என்ற தெளிவு முக்கியமானது

இவ்வாறாக இலங்கையில் விசேட கல்வித்துறையானது. வளர்ச்சி கண்டு வரு கின்றதினை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

வி.விஸ்ணுகரன
விசேட கல்வி ஆசிரியர்
யா/ தெல்லிப்பழை
யூனியன் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள்

## முயன்றால் முடியும்

### -வில்மா ரூடோல்ப்-



'ஊனமுற்றவர்கள்' என்ற பதத்தினை உபயோகிப்பது தவறு, பதிலாக 'மாற்றுத் திறனாளிகள்' என்பதே சரி என்றஎ விற்கு உலகத்தில் விழிப் புணர்வு ஏற்பட்டது வரவேற் கத்தக்க தொன்றே. எனினும் இது அவ் விடயத்தை ஆராய்ந் தவர்களின் முயற்சியினாலே தவிர இன்றும் பொது மக்களிடம் இது பற்றிய அறியாமை இருப்பதும் அறியப் படுகிறது. இதில் மாற்றுத்திறனாளிகளும் அடங்காமலில்லை. ஆனால் அவர்களைக் குறைகூற முடியாது ஏனெனில் பெரும் பான்மையாக அவர்களை ஏனையவர்கள் கவனிக்காது விடுவதனாலேயே அவர்க ளும் சோர்ந்து விடுகிறார்கள். தன் னம்பிக்கை என்பது அவரவர் இயல்புக் கேற்ப ஏற்படுவது. சிலர் சுபாவத்திலேயே அதனைக் கொண்டிருப்பார்கள், சிலருக்கு அது ஊட்டப்பட வேண்டும். இந்த வகையில் ஒரு பெண்மணியின் வாழ்க்கை பற்றி நாம் இங்கு காண்போம்.

வில்மா ரூடோல்ப் (Wilma Rudolph)

அமெரிக்காவின் டெனிசி மாநிலத் திலுள்ள பெத்லேஹெம் என்ற இடத்தில் **1940** ஆம் ஆண்டு ஜூன் மாதம் **23**ஆம் திகதி ஆபிரிக்க அமெரிக்க இனத்தைச் சேர்ந்தவர்களான எட் ரூடோல்ப் என்ப வருக்கும் பிளாஞ்சி என்பவருக்கும் பிறந் தார். இவ்விடத்தில் இக்குடும்ப நிலையை நாம் மனதில் கொள்ள வேண்டும். தகப் பனான எட் ஒரு றெயில் வீதி போட்டராக வேலை செய்தவர். அத்துடன் அவரின் முதல் மனைவி மூலம் பெற்றெடுத்த பதி னொரு பிள் ளைகளும் அவருடன் இருந்த னர். முதல் மனைவி இல்லாத நிலையில், வில்மாவின் தயாரைத் திருமணம் செய்து அவர் மூலம் எட்டுப் பிள்ளைகளைப் பெற்றார். வில்மா இரண்டாம் மனை விக்கு ஐந்தாவது பிள்ளை யாவார். தாயார் வெள்ளையின செல்வந்தர்களின் வீடுக ளில் வாரத்திற்கு ஆறுநாள் என்ற ரீதி யில் வேலைக் காரியாக இருந்தார். **19** பிள்ளை களுடன் மிகவும் வறுமையான நிலையில் இருந்த இக்குடும்பத்தில் வில்மா நாட் குறைந்த பிள்ளையாக **4** இறாத்தல் நிறை யுடன் பிறந் தார். மிகவும் பலமிழந்த குழந் தையாக இருந்த அவர் நான்கு வயதாயி ருந்தபோது போலியோ நோயினால் தாக் கப்பட்டதோடு செங்கண்மாரி நோயும் இரட்டித்த நிமோனியாவும் ஏற்பட்டு உயிர் பிழைப்பதே அரிது என்ற நிலைக்குச் சென்றாலும் அதிலிருந்து மீண்டுவிட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டார். எனினும் அவரது கால்கள் தளர்ந்து விட்டதோடு இடது கால் முறுகித் திரும்பி ஊனமாகி விட்டது. அன்றைய நிலையில் நோய் எதிர்ப்பு மருந்துகளோ, குணப்படுத்தக்கூடிய மருத்துவமோ இல்லாத நிலையில் மிகவும் சிரமத்துடன் அப்பெற்றோர், அவரை 'மெஹறி மருத்துவக கல்லூரியைச் சேர்ந்த ஒரு மருத்துவ நிபுணரிடம் கொண்டு சென்றனர். அவ் வைத்திய முறையிலான பிடிப்பு (Thera peutic Massage) இருவருடங்களுக்குச் செய்தால் கால்கள்வலுப்பெறும் என்று கூறி அச் சிகிச்சையைச் செய்யத் தொடங்கினர். வாரத்தில் ஒருநாள் வைத்தியசாலைக்குச் செல்வதும் அடுத்த நாட்களில் தாயாரும் மூத்த உடன்பிறந்தவர்களும் முறை வைத்து நாளொன்றிற்கு நான்கு தடவை கள் என சிகிச்சையைத் தொடர்ந்தனர். மீண்டும் சுயமாக நடப்பது என்பது முடி யாது என்பதே வைத்தியர்களின் முடிவாக இருந்தாலும் கோல்களின் உதவியோடு நடக்க வைப்பதற்காகவே சிகிச்சை நடை பெற்றது. ஓரளவு முன்னேற்றம் தெரிந்த நிலையில் அவரின் ஐந்தாவது வயதில் அவரின் இடது காலுக்கு இரும்பினால் செய்யப்பட்ட தாங்கும் கருவியைப் (Steel Brace) பொருத்திவிட்டனர். அவர் களின் அறிவுரைப்படி வரப்போ கும் இரண்டு வருடங்கள் வரை அவர் காலையில் எழுந்தது முதல் இரவு படுக்கைக்குப் போகும்வரை அதை அணிந்திருக்க வேண் டும் என்பதாகும். சிறுபிள்ளையான அவ ருக்கு அதனை அணிந்திருப்பதில் வெறுப்பே ஏற்பட்டது. அது வெளிப் படையாகத் தெரிவது மற்றவர்களுக்குத் தன் ஊனத்தைத் தெரியவைக்கும் என்ப தோடு மற்றவர்களைப்போல ஏன் தானும் இருக்கக்கூடாது என நினைப்பதும் உண்டு. பெற்றோர்கள் வீட்டில் இல்லாத நேரங்களில் அந்த தாங்கு கருவியைக் கழற்றி வைத்துவிட்டு காலை நன்றாக ஊன்றி நடந்து பார்க்கத் தொடங்கினார். முறுகித் திரும்பியிருந்த காலை நேர் செய்து அது நிலைபெறவே அந்தக் கவ சத்தை வைத்தியர்கள் பொருத்தியிருந் தனர். கால்களில் இப்பொழுது நல்ல உணர் வும் இரத்தோட்டமும் ஏற்பட்டி ருந்தது. சிறிதுசிறிதாக முயற்சி செய்து அந்தக் கவசத்தை அகற்றிவிட்டு நடக்கத் தொடங்கியிருந்தார்.

பின்நாளில் அவர் எழுதிய "வில்மா" என்ற தனது சுயசரிதை யில் இதுபற்றிக் குறிப்பிடும் போது, தான் அப்பருவத்தில் நினைத்ததை எழுதியிருந்தார். அது "சுயமாக நான் நடக் கத்தொடங்கிய அந்த நாளிலிருந்து என்னை அந்தக் கவசத்தி லிருந்து விடுபட்டவராகக் கருதுவர். முதலில் அவர்கள் கொண்டிருந்த கருத் துக்கு மாறாக வில்மாவும் சாதாரணமாக நடக்கக் கூடியவர் என்றும் மற்றவர்க ளைப் போலவே உள்ளவர் என்றும் எண் ணுவார்கள்" என் பதுதான். குழந்தைப் பரு வத்திலிருந்த அவருக்கு அவரது உடலி யல் யதார்த்தத்தை புரிந்து கொள் ளக்கூடிய மனவிருத்தி இல்லாது இருந்தி ருக்கும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவரது அறிவும் ஏனையவர் கள்போல நடக்க வேண்டும் என்ற பெரு விருப்பும் அவரது வாழ்விலே ஏற்பட்ட உந்துதலாகும்.

இவ்விடத்தில் அவருக்கு தன் ஊனம் பற்றிய கவலையோடு இன்னொரு அச்சமும் தோன்றியிருந்தது. அன்றைய காலத்தில் தென் பிரதேசங்களில் ஆப் பிரிக்க அமெரிக்கர்களை இரண்டாமி டத்திலேயே வைத்துப் பார்க்கும் நிலை இருந்தது. பாரபட்சம் பாராட்டப்பட்ட காலம் அது. தாயாருடன் வைத்திய சாலைக்குப் போகும்போதும் இதை அவர் அவதானித்திருந்தார். பேருந்துகளில் பின் ஆசனங்களிலேயே அவர்கள் அமர முடி யும். முன் ஆசனங்கள் வெள்ளையினத்த வருக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. அத்துடன் வெள்ளையினத்தவர் இருக்க இடமில்லா விட்டால் கறுப்பினத்தவர் தன் ஆச னத்தை அவருக்கு வழங்க வேண்டும். பிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாணம் முழுக்க நின்று கொண்டே செல்ல வேண்டிய நிலையும் இருந்தது. இப்படி பிஞ்சு வயதிலேயே அனுபவங்களைப் பெறத்தொடங்கினார்.

1947ல் தனது ஏழாவது வயதில் கிளார்க் வில்லி என்ற இடத்தின் கொப் ஆரம்பப் பாடசாலையில் (Cobb Elementary School in Clarksville) அவர் சேர்க்கப்பட்டார். அவரின் நலிந்த ஆரோக்கியத்தின் காரணமாக அவா அரி வரி வகுப்பையும் முதலாம் வகுப்பையும் அநுபவிக்க முடியாது போய் விட்டது. இரண்டாம் வகுப்பில் சேர்க்கப் பட்டார். இப் பாடசாலையும் அவருக்குச் சில படிப பினைகளைக் கொடுத்திருந்தது. அப்பாட சாலையா னது ஆப் பிரிக்க அமெரிக்கர்க ளுக்கானது மட் டுமே. இப்பாட சாலை ஆரம்பப் பிரிவிலிருந்து உயர் தரம் வரை கொண்டதாகும். பாடசாலையின் வசதிகள், பாட விதானங்கள், ஏனைய பொருட் கள் எல்லாம் அப்பிர தேசத் திலிருந்த வெள் ளையினத் தவ ருக்கான பாட சாலைகளை விட தரத்தில் குறைந்தே காணப்பட்டன. எனினும் வில்மா ரூடோல்ப் பாடசாலை செல்வதை மிகவும் விரும்பினார். மிகவும் நலிவுற்றவராகவும், ஏனையோரால் கிண் டல் செய்யப்பட்டவராகவும் இருந்த இவர் தற்போது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்வராக மாறியிருக்கிறார். இதனை அவரது சுயசரிதையில், நான் ஏனையவர்களால் ஏற்றுக் கொளளப்பட வேண்டும் என்ற எண்ணத்தை இறுதியில் நான் அடைந்துவிட்டேன் எனக் குறிப்பி டுகிறார்.



இன அடிப்படையில்காட்டப்பட்ட வித்தியாசங்களை அவர் ஓரளவு அறிந் திருந்தார். பாடசாலையில் ஆபிரிக்க அமெரிக்கர்களின் வாழ்வியல் சரித்திரம் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டது. அதில் வேற்றுமை காட்டப்படுவதுபற்றி எதுவும் இருந்ததில்லை. மாறாக அவர்களின் சாத னைகள் முயற்சிகள் பற்றியே கூறப்பட் டன. இதுபற்றி அவர் கூறுகையில்,

அத்தகைய கற்பித்தலின் நோக்கம் தாம் இப்பொழுதும் அமுக்கப்பட்ட ஒரு சமூகம் என்பதை அழுத்துவதைத் தவிர்க் கவும், அங்கிருந்த கறுப்பின மாணவர் களில் யாரா வது சிலர் ஏதோ ஒன் றில் தாம் சிறந்த வராக இருபப தாக பெருமைப் பட்டுக் கொளளும மனோ நிலையை வருவிப் பதற்காக வுமே என்கிறார். அதாவது தாழ்வு மனப்பான்மை கொள்வதைத் தவிர்ப்பதற்காக என எடுத்துக் கொள்ளலாம். ஆனாலும் சிறு மியாக இருந்த அந்த நேரத்தில் அவர் அதனை வேறுவிதமாக விளங்கியிருந்தார். அவர் வயதொத்த ஏனைய ஆண் பெண் சிறார்கள் போல இல்லாமல் ஒரு சிறப் பம்சமாக அவர் செம்மைநிறம்கொண்ட தலைமுடியையும் ஓரளவு வெணமைநிறம் படர்ந்த கறுப்புத் தோலினையும் கொண் டிருந்தார். அவரைப்பொறுத்தளவில் அந்தக் கூட்டத்திடையே அவர் வெள்ளை யினத்தவரானார். சமூக அறிவு வளராத


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பருவத்தில் தன் தோற்றத்தினை மகிமையுடையதாகவும், வெள்ளையினத்தவர் காட்டிய பாரபட்சம் நியாயமற்றதும் என எண்ணினார். அத்துடன் வெள்ளையினத்தவர் அனைவருமே அற் பமானவர்கள் என்றும் தீய எண்ணம் கொண்டவர்கள் என்றும் நினைத்தார். அவர் வளர வளர தமது சமூகத்தினை வெள்ளையினத்தவர்கள் நடத்திய விதம் கண்டு ஆத்திர முற்றபோதிலும், அமைதியையும் சாந்தியையும் வலியுறுத்திய அவர் பின்பற்றி வந்த கிறீஸ்தவ பாரம்பரியம் அதனைத் தணித்து வந்தது என்றே கருதப்பட்டது. ஏனெனில் அவர் தனது மதத்தின் மேல் நல்ல விசுவாசம் கொண்டவராவார்.

பாடசாலைக் கல்விபெற்ற காலத்தில் அவருக்குத் தென் பூட்டும் நடவடிக்கைகள் இருந்தன. அவரின் ஆசிரியையாக விளங்கிய திருமதி அலிசன் (Mrs. Allison) மிகவும் தராள மனமும் அன்பும் கொண்டவர். அவர் வில்மாவிற்கு தன்னம் பிக்கை ஊட்டுவதிலும், சுயகௌரவத்தை வளர்ப்பதிலும் ஈடுபட்டு வந்தார். அதே சமயம் பாடசாலை நன்நடத்தைக்குப் பொறுப்பான ஆசிரியையான திருமதி ஷொஸ்கின்ஸ் (Mrs. Hoskins) ஒருமுறை இவரை கையால் அடித்துவிட்டார். ஆரம் பத்தில் அவரை ஒரு கடு மையான மற்றும் தீயவராக எண்ணமிட்ட வில்மா பின்னர் அவர் வகுப்பில் செல்லம் கொடுப்பதோ, பாரபட்சம் காட்டுவதோ இல்லை அத்துடன் எல்லோரையும் சமமாக எடுப்பவர் என எழுதுகிறார். அந்த ஆசிரியை இவரை காலில் கருவி அணிந்த நிலையிலும் கல்விக்கு வேண்டியவற்றை செயவதற்காக வெளியில் அனுப்பி விடுவார். சும்மா இருந்து பகற்கனவு காண்பதை அவர் அனுமதிப்பதில்லை. செயன் முறைப் பாடங்கள் உடற்பயிற்சி என்பவற்றைச் செய்தேதீரவேணடும். இது பின்நாட்களில் அவர் தனது விளையாட்டு வீராங்கனையாகப் பயிற்சி எடுப்பதற்கு ஒரு தீவிரத்தைக் கொடுத்ததா கக் கருதலாம்.

அவர் பதினொரு வயதான போது, அவரது குடும்பத்தினர் விடாமுயற்சியுடன் அவருடைய காலுக்கு கொடுத்த வைத்திய அழுத்தமும், தாங்கு கருவி அகற்றிய நிலையில் அவர் எடுத்த பயிற்சியும் ஏனையவர்கள்போல நடக்க மட்டுமல்லாது வேகமாக ஓடவும் செய்தார். தனது 12வது வயதில் ஆண் பிள்ளைகளுடன் கூட போட்டியிட்டு வெல்லக்கூடிய ஓட்ட வீராங்கனையாகத் திகழ்ந்தார்.

அவர் 'பேர்ட் உயர் கல்லூரி' (Burt High School) என்ற புதிய பாட சாலைக்கு 7ஆம் வகுப்பில் சேர்ந்து படிக்கத் தொடங்கினார். அதே பாடசாலையில் இவரின் மூத்த சகோதரியும் படித்துக் கொண்டிருந்தார். இதுவும் ஒரு ஆப்பிரிக்க அமெரிக்கர்களுக்கான பாடசாலையே. அங்கு இவர் தனக்கு மிகவும் பிடித்தமான கூடைப்பந்தாட்டம் விளையாட விரும்பி பாடசாலை உடற்கல்வி ஆசிரியரான கிளின்டன் கிறே (Clinton Gray)யிடம் வேண்டிக் கேட்டார். இவரது சகோதரி மிகவும் திறமையான கூடைப்பந்தாட்ட வீராங்கனையாக இருந்தபடியால் அவருக்காக இவரையும் குழுவில் சேர்த்துக் கொண்டார். ஆனால் இவரை தடகளப் பயிற்சியிலேயே அவர் சேர்க்க விரும்பியிருந்தார். இதில் வில்மாவும் சேர்ந்து கொண்டார் என்றாலும் தனது ஒன்பதாம் வகுப்பு முதல் பருவகாலம் வரை கூடைப் பந்தாட்டத்தையும் விளையாடினார். இதில் அவர் தனது இரண்டாவது வருடத் தில் 25 போட்டிகளில் 803 புள்ளிகளைப் பெற்றமை மாநில அளவில் சாதனையாக இருந்தது. இதன் காரணமாக டெனெசி மாநில கூட்டு முதன்மைநிலை வெற்றியீட்டும் போட்டியில் அவரின் பாடசாலை கலந்துகொண்டு கால் இறுதிவரை சென்றது. போட்டியில் பட்டத்தை வெல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை என்றாலும் டெனெசி அரசாங்க பல்கலைக்கழகத்தின் தடகளப் பயிற்சியாளரான எட் டெம்பிள் (Ed Temple) இவரின் திறமைகளைப் பார்த்து இவரை தடகளப் பயிற்சியில் ஈடுபடுமாறும் அதனால் அவர் ஒரு சிறந்த வீராங்கனையாக முடியும் எனக் கூறியதோடு, உயர் கல்லூரிப் படிப்பு முடிந்ததும் தமது பல்கலைக்கழகத்தில் சேருமாறு உற்சாகப் படுத்தினார். இதே ஆண்டில் அலபாமா மாநிலத்தின் 'ரஸ்கேஜி பல்கலைக்கழக'த்தில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த தென் மாநிலங்களுக்கான தடகளப் போட்டியில் கலந்துகொள்ளச் சென்றார். இது அவரின் முதலாவது பெரிய போட்டியாகும். இதில் தென்மாநிலத்தின் அனைத்து கல்வி நிலையங்களையும் சேர்ந்த பெண் போட்டியாளர்கள் வந்திருந்தனர். இதில் அவர் ஒரு போட்டியில்கூட வெற்றி பெறவில்லை. இது அவருக்கு ஒரு பின்னடைவு என்றாலும் பின்னர் தனது சொந்தத் திறமையின்மையே காரணம் என உணர்ந்தார். சோர்வை நீக்கி மிகவும் கடுமையாக வேண்டிய விதத்தில் பயிற்சி செய்தது மட்டுமல்லாது அடுத்த வருடப் போட்டியில் பங்கு பற்றி அனைத்துப் போட்டிகளிலும் முதல்தர வெற்றியைப் பெற்றார்.

உயர் கல்லூரியில் சேரும்வரை ஒலிம்பிக் போட்டிகள் பற்றி வில்மா அறிந்திருக்கவில்லை. அவரின் பயிற்சியாளரான எட் டெம்பிள் யாரையாவது அந்தநிலைக்குக் கொண்டுவர வேண்டும் என விரும்பியிருந்தார். அத்துடன் வில்மாவின்மேல் அதுபற்றிய நம்பிக்கையையும் கொண்டிருந்தார். இது தொடர்பில் நாடளாவிய அஞ்சல் ஓட்டங்களில் வில்மா உட்படப் பெண் பிள்ளைகளை ஈடுபடுத்தினார். குழுவினர் பிலாடெல்பியா மாகாண தடகளக் கழகத்தின் ஒன்பது போட்டிகளில் வில்மா பங்கெடுத்து அனைத்திலும் வெற்றிபெற்றார். இங்குதான் அவர் தனது முதலாவது துணையான ஜாக்கி றொபின்சன் என்பவரைச் சந்தித்தார். அவரும் ஒரு ஆப்பிரிக்க அமெரிக்கராவார். இவர் மூலம் உயர் கல்லூரியில் படித்தபோதே ஒரு பெண்மகவை ஈன்றார். எனினும் தொடர்ந்து பாடசாலை செல்ல வேண்டியிருந்ததால் அப்பிள்ளையை இவரின் பெற்றோரே வளர்த்து பின் இவரிடம் கொடுத்திருந்தனர். இவரின் முதல் திருமண வாழ்க்கை 17 மாதங்களே நீடித் திருந்தது.

ஒலிம்பிக் போட்டிகளுக்கான பயிற்சிகள் 'சீட்டில்' (Seattle) என்ற நகரத்தில் நடந்தபோது அதில் இவரும் பங்கேற்று 1956ம் வருடம் அவுஸ்திரேலியாவில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் விளையாடத் தகுதிபெற்றார். அமெரிக்கக் குழுவிலேயே மிகவும் இளையவராக இருந்த இவர் தனது முதலாவது ஆகாய விமானப் பயணத்தை மிகவும் பரபரப்பான மனத்துடன் செய்திருந்தார். அவுஸ்திரேலியாவில் 200 மீட்டர் ஓட்டப்போட்டியில் இருந்து இவர் விலக்கப்பட்டது கவலையளிப்பினும், தனது முதல் ஒலிம்பிக் போட்டியில் 4x100 மீற்றர் அஞ்சலோட்டத்தின் 3ம் நிலையில் தனது பங்கை வகித்து செம்புப் பதக்கத்தைப் (Bronze Medal) பெற்றுக்கொண்டமை மகிழ்ச்சியளிப்பதாகும்.

அமெரிக்காவில் நிலவிய இனப் பாகுபாட்டை அவர் வெறுத்திருந்தார். பாடசாலையில் படிக்கும் நாட்களில் சிலரை இவருக்குப் பிடிப்பதில்லை. ஆனால் அவர் பதக்கம் பெற்றுத் திரும்பிய வேளை அனைவரும் சேர்ந்து இவரை வரவேற்கும் பதாகைகளை நாட்டியதுடன் இவரை வரவேற்றும் இருந்தமை இவரது மனதில் சில மாற்றங்களை உண்டு பண்ணியது. அவர்கள் இவரது பதக்கத்தை வாங்கிப்பார்த்து மகிழ்ந்தனர். இவரிடம் அதைத் திருப்பிக் கொடுத்த போது அது அனைவரின் கைகளும் பட்டு மங்கியிருந்தது. இவர் அதனை அழுத்தித் தேய்த்து சுத்தப்படுத்தியபோதும் அது நிறம் மங்கியதாகவே இவருக்குப்பட்டது. அப்பொ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதே மங்காத தங்கப் பதக்கம் பெறவேண்டும் என மனதில் இருத்திக் கொண்டார்.

டெனெசி பல்கலைக்கழகத்தில் இவர் கனிஷ்ட பாடசாலை உடற்கல்வி மற்றும் உளவியல் ஆகியவற்றைப் பிரதான துறையாகக் கொண்டு கல்வி கற்றார். அத்துடன் தொடர்ந்து தடகளப் பயிற்சியிலும் ஈடுபட்டார். 1960 ஆம் ஆண்டு டெக்சாஸ் மாநில கோப்பஸ் கிறீஸ்டி தேசிய தடகளப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டியதன் காரணமாக அவ்வருட ஒலிம்பிக் போட்டிக்கான பயிற்சிக்குத் தேர்வானார். அங்கு நடந்த முன்னோடிப் போட்டியில் 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் அவர் சாதனை படைத்ததோடு அடுத்த எட்டு ஆண்டுகளுக்கு அதுவே நிலைத் திருந்தது. 1960ல ரோம் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிக்கு 100, 200 மீற்றர் மற்றும் 4 x 100 மீற்றர் அஞ்சல் ஓட்டப்போட்டிகளுக்கும் அவர் தெரிவானார்.

1960 ஒலிம்பிக்போட்டியில் அவர் தங்கம் வென்றார் ஒன்றல்ல - மூன்று தங்கப் பதக்கங்கள்! 100 மீற்றர் போட்டியில் முன்னைய சாதனை நேரத்திற்கு சமமாகவும் 200 மீற்றர் போட்டியில் புதிய சாதனை நேரத்தையும் உருவாக்கியதோடு பின்னிலையில் இருந்த அஞ்சல் ஓட்டத்தையும் மாற்றக்கூடியதான வேகத்தில் ஓடி வெற்றியடையச் செய்தார். இவ்விடத்தில் அவரின் மனோ திடம்பற்றிய ஒரு விடயத்தையும் கூறவேண்டும். 100 மீற்றர் போட்டிக்கு முதல்நாள் அவர் ஒரு குழியில் கால் தடக்கியதால் கணுக்கால் மூட்டு திரும்பி விட்டதோடு வீக்கமடைந்து அதிக வலியும் சேர்ந்துகொண்டது. ஆனால் அவர் திடசங்கற்பத்தோடு போட்டியில் கலந்தது மட்டுமல்லாது வெற்றியும் பெற்றார் அமெரிக்கா சார்பில் பெண்ணொருவர் ஒரே ஒலிம்பிக் போட்டியில் மூன்று தங்கப் பதக்கங்கள் பெற்றமை அதுவே முதற்தடவையுமாகும். இதற்கு முன் ஆப்பிரிக்க அமெரிக்கரான ஜெசி ஓவென் என்பவர்1936ல் ஜோ மனியில் இத னைச் செய் திருந் தார்.

அவர் அமெ ரிக்கா திரும் பமுன் பிரிட்ட னுக்கும் மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் அழைத்துச் செல்லப்பட்டு அங்கும் பல போட்டிகளில் பங்கு பற்றினார். அனைத்துப் போட்டிகளிலும் வெற்றியே பெற்றார். அமெரிக்கா திரும்பியபோது அப் போது ஜனாதிபதியாக இருந்த ஜோன் எப். கெனடி அவரை வெள்ளை மாளிகைக்கு அழைத்துப் பாராட்டினார். 1961 ல் அவருக்கு அமெரிக்காவின் 'சல்லிவன் விருது' (Sullivan Award) வழங்கப்பட்டது. வெள்ளையினத்து அதிகாரிகளினால் அவர்கள் வட்டத்துள் நடாத்தவிருந்த பாராட்டுவிழாவில் கலந்துகொள்ள மறுத்துவிட்டார். இதன்பின் அனைத்துப் பிரிவினரும் சேர்ந்து அவருக்கு பாராட்டு விழா நடத்தியமை அந்நகரத்தில் பிரிவினை அற்ற நிலையில் நடந்த முதல் நிகழ்ச்சியாக இருந்தது.

அவர் மேலும் பல விருதுகளைப் பெற்றார் எனினும், தன்வாழ்க்கைக்குத் தேவை என்ற அளவில் பணமாக எதையும் பெறவில்லை. தனது சொந்த வாழ்க்கைக் குத் திரும்புவது அவருக்குப் பெரும் சிரமமாக இருந்தாலும், அதனைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. இது பற்றி அவர் கூறுகையில், "நீங்கள் உலகப் புகழ் பெற்று மன்னர்களுடனும் மகாராணிகளுடனும் கூட இருந்து விருந்துண்டு களித்திருக்கலாம். ஆனால் அதன் பின் உங்கள் முதல் வேலை ஒரு வேலையில் அமர்ந்திட வேண்டும் என்பதுதான். இது கொஞ்சம் சிரமமானதுதான். ஏனெனில் நீங்கள் மற்றவர்கள் மத்தியில் சில காலம் இருந்து அவர்களுடன் உறவாடி சொந்த வாழ்க்கைபற்றிய எண்ணங்களை மறந்து விட்டிருப்பீர்கள். திரும்பவும் பழைய வழமையான வாழ்க்கைக்குத் திரும்ப நீங்கள் பயிற்சி செய்யவேண்டும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதாகும். இதற்கமைய அவரும் தனது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர தொழில் செய்தார்.

அவரது வாழ்வில் அவர் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டவர்களில் அவரின் பயிற்சியாளரான எட் டெம்பிளிடம் அவர் மிகவும் ஆழமான அன்பு கொண்டிருந்தார். அவர் இவரை உற்சாகப்படுத்தி வந்தார். அன்றைய நேரத்தில் மிகவும் வேகமான ஓட்டவீரர் என இவர் திகழ்ந்தார். 1964ஆம் ஆண்டின் ஒலிம்பிக் போட்டியில் இவர் கலந்துகொள்ளவில்லை. 1963 ஆம் ஆண்டுடன் இவர் போட்டிகளில் கலந்துகொள்வதை நிறுத்திவிட்டார். அதே ஆண்டு டெனெசி பல்கலைக் கழகத்தில் பட்டம்பெற்று இரண்டாம் நிலை ஆசிரியராகவும் பெண்களுக்கான தடகள பயிற்சியாளராகவும் அவர் கற்ற கோப் கனிஷ்ட பாடசாலையில் பணியாற்றத் தொடங்கினார். அவருக்கு மாதம் 200 டொலர்கள் சம்பளமாகக் கொடுக்கப்பட்டது. அவர் தனது உயர் கல்லூரித் தோழனான றொபேர்ட் எல்ரிஜ் (Robert Eldridge) என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். ஆனால் இத் திருமணமும் இறுதிவரை நிலைக்கவில்லை. அவரை விவாகரத்துச் செய்துவிட்டு தனது நான்கு பிள்ளைகளையும் (இரு ஆண்களும், இரு பெண்களும்) தானே வைத்து வளர்த்தார்.

இச்சமயத்தில் அவர் இன்டியான மாநிலத்தின் டீப்போ பல்கலைக்கழகத்தில் பயிற்சியாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். இதன் பின் பொஸ்டனில் சென்று வாழ்ந்தார். 1967ல் அன்றைய உப ஜனாதிபதியான (Hubert Humphrey) "Operation Champion" என்ற ஒரு நிகழ்ச்சித் திட்டத்தில் பணியாற்ற இவரை அமர்த்தினார். இது பிரதேசத்தின் உட்பகுதிகளில் இருக்கக்கூடிய திறமையான விளையாட்டு வீரர்களை வெளிக்கொணரும் ஒரு முயற்சியாகும். இதில் பணியாற்றியபின் இவர் பல்ஷாம் நிலைக் கல்லூரியில் பணிக்கு அமர்த்தப்பட்டார்.

1977ஆம் ஆண்டு தனது சுயசரிதை நூலான "வில்மா" (Wilma) என்ற புத்தகத்தை வெளியிட்டார். அதே ஆண்டிலேயே அமெரிக்க தொலைக்காட்சி நிறுவனமான NBC அதனை குறுந்திரைப்படமாக வெளியிட்டது. இதன்பின் 1993 ஆம் ஆண்டுவரை பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டதுடன் பல கௌரவப் பதவிகளையும் வகித்தார். அத்துடன் 'ரூடோல்ப் வில்மா நிலையம்' என்ற பெயரில் இலாபநோக்கற்ற ஒரு நிறுவனத்தை பகுதிநேர விளையாட்டு வீரர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக தோற்றுவித் திருந்தார். 1987ல் கிளார்க்ஸ்வில்லி (Clarksville in Tennessee State) நகரத்தில் ஒரு வீதிக்கு இவர்பெயர் சூட்டப்பட்டு இன்றும் அது வழங்கி வருகிறது. 1993ல் இவருக்கு 'The Great Ones' என்ற பட்டம் கிடைத்தது.

அடுத்த ஆண்டான 1994 இல் நவம்பர் மாதம் 12 ஆம் திகதி மூளையில் ஏற்பட்ட புற்றுநோய் தாக்கத்தின் காரணமாக நாஷ்வில்லி என்ற இடத்தில் இவர் காலமானார். இவரது உடல் ஒலிம்பிக் கொடியினால் போர்த்தப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது.

வில்மா ரூடோல்ப் ஒரு முதல்தர விளையாட்டு வீராங்கனை என்ற நிலை அடைந்தமை ஒரு சாதனை என்பதற்கு குறிப்பிட்ட பல காரணங்கள் உள்ளன. அவர் ஒரு ஆப்பிரிக்க அமெரிக்க இனத்தவர் என்பதும் அன்றைய காலகட்டத்தில் இனப்பாகுபாடு இருந்த காரணத்தினால் அவ்வினத்தவர்களுக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களும் மிகக் குறைந்தளவே என்பதும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அடுத்ததாக அவர் மிகவும் வறுமைப்பட்ட நிலையில் பெரிய குடும்பத்தில் இளைய நிலை அங்கத்தவராக இருந்தார். பிறந்து நான்கு வயதாயிருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்போது போலியோ நோய் தாக்கத்தினால் இனி அவரால் நடக்கவே முடியாது என்ற முடிவில் வைத்தியர்கள் இருந் தார்கள். மிகப்பெரிய வைத்திய வசதிகளைப் பெற அவர்களின் பொருளாதாரமும் இடமளிக்கவில்லை. ஆனால் சிறுவயதிலேயே அவருக்கு ஏற்பட்ட ஆவேசம் அவரை மற்றவர்களைப்போல சாதாரணமாக நடமாட வைத்தது மட்டுமன்றி தங்கம் வெல்லும் அளவிற்கு கொண்டு சென்றது. தனது சுயசரிதையில் கூறிய ஒரு வசனத்தை நாம் அனைவரும் நினைவு கொள்ளவேண்டும். அது, "வைத்தியர்கள் நான் நடக்க இயலாது எனக் கூறினார்கள், எனது தாயாரோ நீ நன்றாக நடப்பாய் என்றார்கள். நான் எனது தாயின் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்தேன்" என்பதாகும்.

ஓர் உண்மையை நாம் உணர வேண்டும். அறிவுரையும் தேறுதலும் யாரும் வழங்கலாம். ஆனால் எமக்கு உற்றாண்மையான ஒருவர் அதனைச் செய்யும் போது எமக்கு ஒரு துணை கிடைத்தது போன்ற உணர்வு எம்மையறியாமலே எம்மைத் தென்பூட்டும் என்பதோடு துணிந்து முயற்சிக்கச் செய்யவும் வைக்கும். சிறு பிள்ளையாக இருந்த வில்மாவிற்கு தானாக ஒரு முயற்சி செய்யவேண்டும் என்ற உணர்வு ஊட்டப்பட்டதாலேதான் அவர் உறுதியாக முயற்சி செய்து தன் ஊனத்தை மாற்றினார். பின்னர் வளரும் காலத்தில் அதுவே அவரது சுபாவமாகவும் மாறிவிட்டது. அவரது தாயார் மட்டுமல்லாது அவரது மூத்த சகோதரர்களும் துணையாக இருந்தார்கள். தினசரி வைத்தியசாலைக்குப் போக வசதியற்ற நிலையில்த்தான் வீட்டிலேயே ஊனப்பட்ட காலுக்கு வைத்திய அழுத்தம் (Therapeutic Massage) செய்ய வேண்டி ஏற்பட்டது. குடும்பத்தினரின் ஆதரவு இருந்ததனால் அவர்கள் முறை வைத்து நாளுக்கு நான்கு தடவை சிகிச்சை செய்யப்பட்டது.

பாடசாலை சென்றபோது அவருக்குக் கிடைத்த ஆசிரியரான திருமதி அலிசன் (Mrs. Allison) இவருக்குத் தன்னம்பிக்கை ஊட்டினார். இவரால் முதலில் வெறுக்கப்பட்ட ஆசிரியையான திருமதி ஷொஸ்கின்ஸ் (Mrs. Hoskins) பாகுபாடு காட்டாதவர் என்ற உண்மையை வில்மா பின்னர் அறிந்தபோது, தான் முயற்சி செய்யவேண்டும் என்பதற்காகவே அவர் தன்னிடம் கண்டிப்பாக இருந்தார் என்பதைப் புரிந்துகொண்டார். இதன் பின் அப்பாடசாலை உடற்கல்வி ஆசிரியரான கிளின்ரன் இவரை தடகளப் பயிற்சிக்காகவே சேர்க்க விரும்பினார். இவரை உற்சாகப்படுத்துவதற்காக கூடைப் பந்தாட்டத்திற்கு அனுமதித்தார். பின்னர் தடகளப் பயிற்சியிலும் அவரை ஈடுபடுத்தி அவரின் திறன் விருத்திக்கு உதவினார். டெனெசி பல்கலைக்கழக உடற்போதனாசிரியரான எட் டெம்பிள் (Ed Temple) அதனை




ஆமோதிப்பதுபோல இவரை தடகளப் பயிற்சிக்கு ஊக்குவித்ததோடு பின் காலம் முழுவதும் அவரின் பயிற்சியாளராக இருந்து ஒலிம்பிக் போட்டியிலும் கலந்து கொள்ள வைத்தார்.

ஆரம்பகாலத்தில் தாயாரின் நம்பிக்கைகொள்ள வைக்கும் வார்த்தை அவரின் உள்ளத்தில் பதிந்து பின் ஏனையவர்களின் ஆதரவு கிடைத்தபோது அவ்வார்த்தையின் அர்த்தம் வியாபகம் பெற்று அவரை மிகவும் உயர்நிலை அடையவைத்தது என்றே கூறுதல் இங்கு பொருத்தமானதாகும்.

**ச.சதானந்தசர்மா**
திருநெல்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளில் தோன்றிய மின்னல்

சிறுகதை

மெல்லிய காற்றுடன் கூடிய இனிமையான அந்த மாலைப்பொழுதில் கலகலப்புடன் கூடிய சந்தோசங்களுடன் களைகட்டியது அந்தக் கடற்கரை ஓரம். சந்தோச ஆரவார கூச்சல்கள் காதைக் கிழிக்கும்வரை அதிகரித்துக்கொண்டே இருந்தன. ஆனால் இவற்றை எல்லாம் சாட்டை செய்யாது கடந்தகால நிலையில் மூழ்கி அந்த கடற்கரையில் அமந்திருந்தாள் சீதா.

திடீர் என ஒரு குரல் சீதா இங்க தனிய இருந்து என்ன செய்றாய்?

ஓ பிரியாவா? வா பிரியா .

ஏன் சீதா தனிய இருந்து அழுகிறாய்?

ஒன்றுமில்லை பிரியா

சீதா உன்னை எவ்வளவு நாட்களுக்கு பிறகு காண்கின்றேன். நீ இப்படி தனிய இருந்து அழுகிறது எனக்கு கஸ்ரமா இருக்கு. உனக்கு சொல்லனும் என்று தோன்றினால் சொல்லு.

இல்லை பிரியா உனக்கு தெரியாதது இல்லை .

அப்பா திடீர் என்று விபத்தில இறந்துட்டார் தம்பிக்கும் தங்கச்சிக்கும் கண் தெரியாது. அம்மாக்கு புற்று நோய் நான் இந்த ஒற்றைக்காலுடன் படித்த படிப்புக்கு வேலை கிடைக்காமல். ஒரு புடவைக்கடையில் தான் வேலை செய்கிறோன்.

இது எனக்கு தெரியும் தான சீதா.

உனக்கு இப்ப என்ன பிரச்சினை என்று நான் தெரிந்து கொள்ளலாமா?

பிரியா அம்மாவுக்கு ஒரு சத்திர சிகிச்சை மூன்று மாதங்களுக்குள் செய்யனுமாம். தவறினால் அம்மாவை காப்பாற்ற முடியாதாம்.

என்ன சீதா சொல்கிறாய்?

ஆமாம் பிரியா நான் வாங்கிற ஏழாயிரம் ரூபா சம்பளத்தில் என்ன செய்ய முடியும்? தம்பி தங்கச்சியையும் பாடசாலையில் சேர்த்து படிப்பிக்கனும் என்று ஆசையாய் தான் இருக்கு ஆனால் நான் ஒரு அக்காவாக இருந்து என்ர சகோதரங்களுக்கு எதுகுமே செய்ய முடியல.

இப்படி இருக்கிற இந்த நேரத்தில திடீர் என்று ஒரு பிரச்சினை. நான் வேலை செய்கின்ற கடையில ஏதோ ஒரு பிரச்சினையாம். முதலாளி ஐயா எல்லாரை யும் வேலையால நிப்பாட்டிற்றாராம். எனி வேலையும் இல்லை.

வீட்டில இருக்க அம்மாவை பார்க்க கவலையா இருக்கு மூன்று மாசத்தில சத்திர சிகிச்சை செய்தால் தான் உயிரோடு இருக்கலாம் என்று அம்மாக்கு தெரியாது பிரியா.

"கடலில் அகப்பட்ட துரும்பு போல இருக்கு" என் நிலைமை.

சீதா முதல்ல அழுகிறத நிறுத்து எல்லாத்துக்கும் ஒரு தீர்வு இருக்கு. நான் இருக்கிறன். உனக்கு முதல்ல உனக்கு ஒரு வேலை பார்ப்பம். அதற்கு பிறகு மற்ற பிரச்சினைகளை தீர்க்கலாம்.

எனக்கு ஒரு தனியார் நிறுவனத்தினுடைய உரிமையாளரைத் தெரியும். அவரிடம் உன் நிலமையை எடுத்துக் கூறினால் கண்டிப்பாக உனக்கு வேலை கிடைக்கும் என்று நினைக்கிறன். நீ இப்ப வீட்ட போ நான் அவரிடம் கதைத்திட்டு நாளை வந்து உனக்கு சொல்லுறன்.

பிரியா என்ன வேலை இருந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ சொல்லு நான் கண்டிப்பா செய்வன். சரி சீதா நீ கவலைப்படாத இலையுதிர் காலத்திற்கு பிறகுதான் வசந்த காலம் வரும் உனக்கும் வசந்த காலம் வரும் காத்திரு சீதா நான் போய் வருகிறோன்.

கண்களை துடைத்து மெல்லமாக எழுந்த சீதா வீட்டுக்குப் புறப்பட்டாள்.

வா.. சீதா இவ்வளவு நேரமாய்

சரி அம்மா.

உன்ர விருப்பப்படி செய் பிள்ளை எனக்கு கடவுள் கொடுத்த மூன்று பிள்ளைகளையும் ஒவ்வொரு குறைபாட்டுடன் கொடுத்து அப்பாவையும் கடைசி வரை விடாமல் காலன் பறித்திட்டான். நீ மட்டும்தான் எங்களுடன் கிடந்து இழுபடுகிறாய். எனி உனக்குகொரு வரனைத் தேடுகிற வயசாச்சு உன்னை வைத்து



எங்கே போனனீ அம்மா நான் ஒரு நண்பியை கன நாளைக்குப் பிறகு இன்டைக்குத் தான் பார்த்தனான். நிறைய நேரம் கதைத்ததால நேரம் போனது தெரியவில்லை. ம்ம்!! இப்ப வேலைக்கு என்ன செய்யப்போறாய். அம்மா பிரியா ஒரு வேலைகேட்டு சொல்லுறன் என்று சொன்னவள். கடவுள் ஆசி எங்களுக்கு இருந்தால் கண்டிப்பாய் இந்த வேலை கிடைக்கும் அம்மா. அரசாங்க வேலைதான் வேணுமென்றால் ஒன்றுமே நடக்காது. கிடைக்கிற வேலையைச் செய்வதுதான் வேலைவாங்கி நாங்கள் சாப்பிடுறம். அம்மா இப்ப அதையெல்லாம் விடுங்கோ வேலை கிடைத்தால் போதும்.

அக்கா உனக்கு வேலைகிடைச் சுட்டுதா? இல்லைத் தம்பி கிடைக்கவில்லை. ஏதாவது ஒரு வேலை கிடைக்கும்போல கிடக்கு. அக்கா உனக்கு வேலை கிடைச்சா எங்களைப் படிக்கவைப்பாயா?

சீதாவின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. பக்கமாய் சென்று அணைத்து, நான் உங்களைப் படிக்கவைப்பேன் நீங்கள் இரண்டுபேரும் என் இரு கண்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா உங்களுக்காகத்தானே இருக்கின்றேன் என்ற ஆறுதல் வார்த்தையோடு எல்லோரும் அந்தக் குடிசையின் ஒவ்வொரு மூலையிலும் தூங்கிவிட்டார்கள். அம்மாவின் சிகிச்சைச் செலவையும் வேலையையும் நினைத்துக்கொண்டு புரண்டுபுரண்டு யோசித்தபடியே சீதாவும் தூங்கிவிட்டாள்.

மறுநாள் காலை எழுந்து பத்திரிகையில் எதாவதொரு வேலையிருக்கிறா என்று பாரர்க்கச் சென்று அதில் இருந்த விளம்பரங்களை எடுத்துக்கொண்டு வீடு திரும்பினாள் சீதா.

வா..சீதா. எங்க போய் வாறாய்? ஏய் பிரியா வேலை என்னாச்சு ?

பிரியா சிரித்தவாறு சீதாவைக்கட்டி அணைத்து உனக்கு வேலையும் கிடைச்சாச்சு. சீதாவிற்கு ஏற்ற இராமனும் கிடைச்சாச்சு. என்ன பிரியா உளறுகிறாய்? ஆமாம் சீதா நான் சொன்னான் தானே . ஒரு கம்பனியில் வேலை கேட்டுச் சொல்வதாக அந்தக் கம்பனி உரிமையாளர் என்னுடைய நண்பன். அவனிடம் போய் உன் நிலைமையை எடுத்துக்கூறி பல்கலைக்கழகம் வரைப படித்துமுடித்துவிட்டு புடைவைக்கடையில் வேலை செய்கிறதைச் சொல்வதை கேட்டு அவனே கலங்கி நின்றான். ஒரு நிமிடம் இப்படி ஒரு பெண்ணுக்கு வாழ்க்கை கொடுத்து அந்த குடும்பத்தையே உயர் நிலைக்குக்கொண்டுவந்தால்தான் என்னுடைய அம்மாவின் ஆத்மா சாந்தியடையும் என்றான் ராம். அவனுடன் கதைத்து அடுத்த நிமிடமே இந்த சந்தோச செய்தியை உனக்குச் சொல்வதற்குத்தான் ஓடோடி வந்தேன்.

பிரியா எனக்கு வேலை மட்டும் போதும்.. இல்லை சீதா இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைப்பதற்காகத்தான் இவ்வளவு நாளும் கஸ்டப்பட்டனி கடவுளாலே கொடுத்தவரம் இது இதை தவறவிடாதே நாளைக்கே வேலைக்குப் போ. எனி அந்தக் கம்பனி உனக்குத்தான். சீதாவிற்கு ஏற்ற இராமன் அந்த ராம் தான் உன்னை நீ தயார் படுத்திக்கொள்

அம்மாவின் சத்திர சிகிச்சைக்கான ஏற்பாடுகள் நடந்தது. தம்பி தங்கையையும் விடுதியில் சேர்த்து அனுப்பி அவர்களையும் படிக்கவைத்து சீதா, ராம் திருமணம் நிச்சயிக்கப்பட்டது.


என்ன சீதா திரும்பவும் இதில வந்து இருக்கிறாய் திரும்பிப் பார்த்தாள். பிரியா நின்றுகொண்டிருந்தாள். வேலை முடிந்து இதால வந்தால்போல சும்மா கொஞ்ச நேரம் இருப்பமென்று இருந்தனான் அவ்வளவ தான். நல்லது சீதா வாறமாதம் எனக்கும் திருமணம் ஆகப்போகிறது. அதற்கு அழைப்பிதழ் தருவதற்கு வந்தால் நீ இங்கே இருக்கிறாய் என்று கூறியபடியே அழைப்பிதழை சீதாவிடம் கொடுத்தாள் பிரியா. நன்றி உணர்வடனும் மகிழ்ச்சியுடனும் அவளது தோள்களைப் பற்றினாள் சீதா.

அவளது கண்கள் நீர் சொரிந்தது மகிழ்ச்சியில்.

S.மகிழா
கட்டப்பிராய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இசைக்குழு அறிமுகம்

கருவி சமூகவள அங்கத்தவர்களின் முழுமையான பங்களிப்புடன் இராகஸ் ருதி எனும் பெயரிலான இசைக்குழு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இவ் இசைக்குழுவின் இசையாற்றுகைகள் ஆலய விழாக்கள் மற்றும் சமூக கலாசார நிகழ்வுகளில் இடம்பெற்று வருகின்றன.




## வேனில் சஞ்சிகை

கடந்த 15.06.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் யாழ். விழிப்புலன் அற்றோர் சங்கத்தினரின் காலாண்டு இதழாக இச் சஞ்சிகை வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

## ஆண்டு விழா

கருவி சமூகவள நிலையத்தின் ஆண்டு விழா நிகழ்வு 12.06.2014 வியாழக்கிழமை கருவி சமுகவள நிலையத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கருவி சமுகவள நிலைய அங்கத்தவர்கள் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.


இந் நிகழ்வு பொருளாளர் திரு. கொன் கிலேடியஸ் தலைமையில் நடைபெற்றது. அன்றையதினம் பார்வையற்ற பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகி உள்ள கருவி சமுகவள நிலைய அங்கத்தவரான செல்வி பக்சலா சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு இளவாலை வருத்தப்படாத வாலிபர் கழகத்தால் மடிக்கணணி ஒன்று வழங்கப் பட்டது.

## வலுவிழந்த பெண்கள் மாநாடு

வவுனியா மாவட்ட வலுவிழந் தோர் புனர் வாழ்வு நிறுவனத்தால் சர்வ தேச மகளிர் தினத்தை முன்னிட்டு வலுவிழந்த பெண் கள் தொடர்பான மகாநாடு ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் மாநாட்டு மண்டபத்தில் 16.05.2014 வெள்ளிக்கிழமை இடம் பெற்றது இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கௌரவ Dr ப.சத்தியலிங்கம் (சுகாதார மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் வட மாகாணம்) சிறப்பு விருந்தினராக உயர் திரு வேதநாயகன் (அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும் முல்லைத்தீவு) கலந்து சிறப்பித்தனர். யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த பெண்களின் தூதுக்குழுக்கள் கலந்து கொண்டு வலுவிழப்புடன் கூடிய பெண் கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக முன்மொழிவுகளை முன் வைத் திருந்தனர்.

## வன்னி விழிப்புலன் அற்றோர் சங்கத்தின் ஓராண்டு விழா நிகழ்வுகள்

வன்னி விழிப்புலன் அற்றோர் சங்கத்தின் ஓராண்டு விழா நிகழ்வுகள் 10.07.2014 வியாழக்கிழமை பரந்தன் கரச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு திரு.ஆ.ருபராஜ் தலை மையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் வன்னி விழிப்புலன் அற் றோர் சங்க அங்கத்தவர்கள் வலுவிழந் தோருக்காக பணியாற்றுகின்ற சக நிறு வனங்களை சார்ந்த பிரதிநிதிகள் ஆர்வலர் கள் மக்கள் பிரதிநிதிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## பார்வையற்றவர்களுக்கான தடகள விளையாட்டுப் போட்டி

பார்வையற்றவர்களுக்கான தடகள விளையாட்டுப் போட்டி செப்ரம்பர் மாத முற்பகுதியில் சுன்னாகம் வாழ்வக நிறு வனத்தால் நடத்தப்பட உள்ளது. இப் போட்டியில் பார்வையற்ற பார்வைக் குறை பாடுடைய அனைவரும் தனிப் பட்ட ரீதி யிலோ அல்லது நிறுனங்கள் அமைப்புக் கள் கழகங்கள் சார்பாகவே பங்குகொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலுவின் "முற்றத்து மல்லிகை" பகுதிக்காக இம்முறை கிழக்கு மாகாணத்தில் உள்ள மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த திரு.சோமசுந்தரம் புவிராஜசிங்கம் அவர்களின் நேர்காணல் இடம்பெறுகின்றது.



கைகள் இல்லாவிட்டாலும் என் உடம்பு முழுவதும் நம்பிக்கை இருக் கிறது.

# முற்றத்து மல்லிகை

ஒவ்வொருவரும் வாழ்க்கையில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தே வாழ்கின்றனர். ஐந்து புலன் களில் ஒன்றையோ, இரண்டையோ ஒரு வன் இழக்கின்றபோது அவனது வாழ்க்கை சவால் நிறைந்ததாக மாறினாலும் எதிர் நீச்சல் போட்டு மாற்றுத்திறன்களைப் பயன படுத்தி சமூகத்தில் வாழப் பழகிக்கொள் கின்றான். ஆனால் இரு கைகளையும் இழந்த ஒரு மனிதன் ஒவ்வொரு நிமிடமும் எவ்வாறு வாழ்க்கையில் பிரச்சினைகளை யும் மன உளைச்சல்களையும் தாங்கிக் கொண்டு வாழ்கின்றான் என்பது அத்தகை யோருடன் கூடிப்பழகும் போதுதான் புரிந்துகொள்ள முடியும்.


அன்று ஒரு இனிமையான காலைப் பொழுது திரு.புவிராஜசிங்கம் அவர் களின் செவ்வி எங்கள் வீட்டில் வைத்து எடுப்பதாகவே ஒழுங்கு செய்யப்பட்டி ருந்தது. நான் அவரின் வரவை எதிர் பார்த்துக்கொண்டிருந்தேன். என்னை அதிக நேரம் காக்க வைக்காமல் சிரித்த வாறே வணக்கம் வணக்கம் என்று கூறிய வாறே வரவேற்று சாவகாசமாக சிறிது நேரம் பேசிய பின்னர் எனது நேர் காணலை ஆரம்பித்தேன்.

**கேள்வி : உங்களைப் பற்றி கொஞ் சம் சொல்லுங்கள்?**

பதில் "என்னுடைய முழுப் பெயர் சோமசுந்தரம் புவிராஜசிங்கம். எனது பிறந்த இடம் கிழக்கு மாகாணத்தில் மட் டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மகிழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெட்டுவான் எனும் கிராமம் ஆகும். நான் ஒரு விவசாய குடும்பத்தை சேர்ந்தவர். சிறுவயதிலே எனது தாயை இழந்த போதிலும் தந்தையின் கவனிப்பிலே நானும் என் உடன்பிறப்புக்களும் வளர்க்கப்பட்டோம். நான் க.பொ.த சாதாரணதரம் வரை கல்வி கற்றுவிட்டு எனது தந்தைக்கு உதவியாக விவசாயத்தில் ஈடுபட்டு கொண்டு இருந்தேன். அத்துடன் சிறுசிறு வியாபாரத்திலும் நான் ஈடுபட்டு வந்தேன்"

**கேள்வி : பின்னர் மட்டக்களப்பு நகரப் பகுதிக்கு எப்போது வந்தீர்கள்?**

**பதில்:** "1990 களில் எமது பிரதேசத்தில் ஏற்பட்ட யுத்த சூழல் காரணமாக விவசாயம், வியாபாரம் போன்றன செய்யமுடியாத ஒரு சூழ்நிலை காணப்பட்டது. அக்காலத்திலே குடும்பத்தின் வறுமை நிலையைப் போக்கவேண்டும் என்ற காரணத்துக்காக வெளிநாடு செல்ல வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற் பட்டது. அம்முயற்சியில் ஈடுபடுவதற்காகவே மட்டக்களப்பு நகரப்பகுதிக்கு வந்தேன்."

**கேள்வி : உங்கள் கைகள் அகற்றப்பட்ட சம்பவத்தை விளக்க முடியுமா?**

**பதில்:** குடும்பத்தின் வறுமை நிலையை நீக்க வேண்டும் என்ற பல கனவுகளையும், கற்பனைகளையும் நெஞ்சில் சுமந்த துடிப்புள்ள இளைஞனாக நகரப் பகுதிக்குள் வந்த என் வாழ்க்கையிலும் விதி விளையாடத் தொடங்கியது அப்பொழுது யுத்த மேகங்கள் சூழ்ந்திருந்த நேரம் நானும் எதிர்பாராமல் வன்செயல் ஒன்றில் அகப்பட்டுக் கொண்டேன். என் கைகள் கால்கள் தாக்கப்பட்ட நிலையில் இறந்து விட்டது போல கிடந்த என்னை சிலர் வைத்தியசாலையில் சேர்த்தார்கள் மூன்று மாதங்கள் வைத்தியசாலையில் இருந்து சிகிச்சை பெற்றேன்.

**கேள்வி : வைத்தியசாலையில் நீங்கள் சேர்க்கப்பட்டு உங்களுக்கு நினைவு திரும்பிய போது உங்கள் மன நிலை எப்படி இருந்தது?**

**பதில்:** அந்த உணர்வுகளை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. எலலோராலும் புரிந்து கொளவதும் சாத்தியம் இல்லை என்று நினைக்கிறேன். முழங்கையிற்கு மேல் எனது இரு கைகளும் அகற்றப்பட்டு இருந்தன. இரு கைகளும் இல்லாவிட்டால் ஒரு மனிதன் தனது சுய தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்து கொள்ள முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். தற்கொலை செய்தாவது நான் இறந்து விடவேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி : நீங்கள் சிறந்த முறையில் கால்களால் எழுதுகின்றீர்கள் அதைப் பற்றி கூறமுடியுமா?**

**பதில் :** வைத்தியசாலையில் இருந்து மிகவும் மனமுடைந்த நிலையில் எனது தந்தையுடன் நண்பர் ஒருவரின் வீட்டில் வாழ்ந்து வந்தேன். இருந்தாலும் எனது முயற்சியினால் கால்களால் எழுத கற்றுக்கொண்டேன். கால்களால் எழுதும் ஆற்றலைக்கண்டு பலரும் என்னை பாராட்டினார்கள். அதே நேரம் வேறு சிலர் என்னை பார்த்து நகைத்தார்கள் "கல்வியையும் காலால் எழுதுவதா" என்று கேட்டு ஏளனம் செய்தார்கள். கைகள் இல்லாவிட்டாலும் நம்பிக்கை என்னுள் வளரத் தொடங்கியது. எனது முயற்சியை கைவிடவேயில்லை.

**கேள்வி : வருமானம் எதுவும் இல்லாத நிலையில் தொடர்ந்து உங்கள் வாழ்க்கை எப்படி அமைந்தது.?**

**பதில:** மட்டக்களப்பிலே ஜீவ ஜோதி என்ற ஒரு இல்லம் இருக்கிறது. அந்த இல்லத்திற்கு பொறுப்பான திருவாளர் இளங்கோ அவர்கள் இரண்டாம் ஆண்டு முதல் ஆறாம் ஆண்டு வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஆசிரியராக என்னை நியமித்தார். அதற் காக சிறிய ஊதியத்தையும் வழங்கினார். ஐந்து ஆண்டுகள் அந்தப் பணியினைச் சிறந்த முறையில் செய்து பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டேன்.

**கேள்வி : அதன் பின்னர் உங்கள் செயற்பாடுகள் எவ்வாறு அமைந்தன?**

**பதில்:** வருமானம் போதியளவு இல்லாத காரணத்தால் 2001 ஆம் ஆண்டளவில் எனது பிறந்த கிராமமான மகிழ வெட்டுவானுக்கே சென்றேன். அங்கு சென்றும் ஆறாம் ஆண்டிற்கு உட்பட்ட பிள்ளைகளிற்கு கால்களால் எழுதி கல்வியை கற்பித்து கொண்டிருந்தேன்.

**கேள்வி: உங்கள் பகுதியில் விசேட தேவைக்குட்பட்டவர்களை ஒன்றிணைத்து ஒரு அமைப்பை உருவாக்கி இருப்பதாக அறிந்தேன் அது பற்றி கூற முடியுமா?**

**பதில்:** எனது கிராமம் வவுணதீவு பிரதேச செயலக பிரிவுக்குள் அடங்கி இருக்கின்றது. மேற்படி செயலக பிரிவில் 24 கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவு உள்ளது. எனவே அங்குள்ள எல்லா வித மான விசேட தேவைக்குட்பட்டவர்களை ஒன்றிணைத்து "வாழ்வகம்" என்ற பெயரில் 2007 ஆம் ஆண்டு ஒரு அமைப்பை உருவாக்கினோம்.

இவ் அமைப்பை உருவாக்குவதற்கும் அன்றிலிருந்து இன்றுவரை எமக்கு உதவிகளை வழங்கி கொண்டு இருப்பதும் கமிட், Handicappet international போன்ற நிறுவனங்களாகும் எமது அமைப்பிலே தற்போது 530 க்கும் அதிகமான அங்கத்தவர்கள் இருக்கின்றனர். மாதாந்தம் 10 ரூபா வீதம் சந்தா பணமாகப் பெற்றுக்கொண்டு அப்பணத்தை சுயதொழில் கடனாக பலருக்கும் வழங்கி பலரை சுய தொழில் களில் ஈடுபட வைத்துள்ளோம். இவ் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை நான் தலைவராக இருந்து செயற்பட்டு வருகின்றேன். எமது அங்கத்தவர்கள் பிற ரிடம் கையேந்தி நிற்காத அளவுக்கு விழிப புணர்வை ஏற்படுத்தி இவ் அமைப்பை சிறப்பாக இயக்கி வருகின்றோம்.

**கேள்வி: உங்கள் அமைப்பின் சாதனைகள் பற்றி கூற முடியுமா?**

**பதில்:** இன்று நகாப் புறங்களைப் பார்த்தால் விசேட தேவைக்கு உட்பட்டவர்கள் பலர் கையேந்தி தமது ஜீவனோபாயத்தை நடத்துகின்ற நிலையை காண முடிகின்றது. ஆனால் எமது பிரதேசமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னது மிகவும் வறுமைக்குட்பட்டது. இருந் தாலும் அங்குள்ள விசேட தேவைக்குட் பட்டவர்களை ஒன்றிணைத்து தன்னம்பிக் கையை கொடுத்து சுய தொழிகளில் ஈடுபட வைத்திருக்கின்றோம் குறிப்பாக கூடை பின்னுவது தொப்பி செய்வது, தும் புத்தடி கட்டுவது போன்ற தொழில்களில் ஈடுப்டுள்ளனர். அத்துடன் மாடுவளர்ப்பு கோழி வளர்ப்பு செங்கல் உற்பத்தி போன்ற தொழில்களையும் செய்து தமது வாழ்க்கையை சிறப்பாக நடாத்தி வரு கின்றார்கள்.

**கேள்வி: உங்கள் அமைப்பின் எதிர் கால திட்டம் என்று நீங்கள் எவற்றை கூறுவீர்கள்?**

**பதில்:** எமது அமைப்பிற்கு நிரந்த ரமான அலுவலகக் கட்டடம் இல்லை தற்போது மாதர் சங்க கட்டடத்தில் தான் தற்காலிகமாக இயங்கி வருகின்றோம்.

கேரதீவு என்ற இடத்தை சேர்ந்த ஒரு அன்பரால் 20 பேச்சஸ் காணித்துண்டு ஒன்று வழங்கப்பட்டுள்ளது. அதில் ஒரு கட்டடத்தை அமைக்க வேண்டும். மதிப் பிற்குரிய அருண்தம்பிமுத்து அவர்கள் விரைவில் கட்டடம் ஒன்றை அமைத்து தருவதாக உறுதி கூறியுள்ளார். மேலும் எதிர்கால திட்டங்களாக கால்நடை வளர்ப்பு, கொங்கறீட் கல் உற்பத்தி, செங் கல் உற்பத்தி போன்ற தொழில்களை எமது அமைப்பின் ஊடாக மேற்கொள்வ தற்கு உத்தேசித்துள்ளோம்.

**கேள்வி: உங்கள் சொந்த வாழ்க் கையில் மறக்க முடியாத மனிதர்கள் என்று நீங்கள் யாரைக் குறிப்பிட விரும்பு கிறீர்கள்?**

**பதில்:** எனக்கு உதவி செய்த பலரை இந்த இடத்தில் குறிப்பிட வேண்டும். குறிப்பாக என் கைகள் துண்டிக்கப்பட்டு இறந்து போகும் நிலையில் கிடந்த என்னை மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் சாக்கில் வைத்து தூக்கிச்சென்று வைத்திய சாலையில் சேர்த்த கிருபாகரன் குடும் பத்தாரையும் வைத்தியசாலையில் இருந்து வந்த பின்னர் என்னையும் எனக்கு உதவி யாக இருந்த எனது தந்தையாரையும் மிக வும் அன்பாக கவனித்த கதிர்காமநாதன் குடும்பத்தாரையும் நான் வறுமையால் மிக வும் வாடிய போது சுவிஸ் நாட்டில் இருந்து பண உதவி செய்த திரு.ஜெயக் குமார் அவர்களையும் மறக்க முடியாது. அத்துடன் எனக்கே தெரியாமல் எனக்குள் இருந்த திறமைகளைத் தட்டி எழுப்பி என்னை ஒரு மனிதனாக நடமாட வைத்த தற்போதய மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் திரு.அருள் மொழி அவர்களை என் வாழ்க்கையில் ஒருபோதும் மறக்க முடியாது. அவர் எனக்கு வழிகாட்டியாக இருந்த ஆசான் என்றே கூறிக்கொள்ளலாம். மேலும் எனது சகோதர சகோதரிகள், தந்தை, படித்த நண்பர்கள், எமது பிரதேச செயலா ளர், அங்கு கடமையாற்றும் சமூக சேவை உத்தியோகத்தர் போன்ற பலரை என் வாழ்வில் மறக்க முடியாதவர்கள் என்றே கூற முடியும்.

**கேள்வி: உங்களைப்போன்ற மாற் றுத்திறனாளிகளுக்கும் அவர்களின் உற வினர்களுக்கும் நீங்கள் கூறவிரும்பும் செய்தி என்ன?**

**பதில்:** இது ஒரு நல்ல கேள்வி முத லில் நான் மாற்றுத்திறனாளிகளின் பெற் றோர்களுக்கும் உறவினர்களுக்கும் சில கருத்துக்களைக் கூற விரும்புகின்றேன் மாற்றுத்திறனாளிகளை வெளியில் அழைத்து சென்றால் கௌரவ குறைவு ஏற் படும் எனவும் அவமானம் ஏற்படும் என வும் தயவுசெய்து எண்ண வேண்டாம். உடலில் குறைபாடு உள்ளவர்களை இப் படி வீடுகளில் பூட்டி வைப்பதன் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் மனம் பாதிக்கப்படுகிறது. அவர்களை கோயில்கள் , கடற்கரை போன்ற பொது இடங்களுக்கு அழைத்து செல்லவேண்டும். இத்தகைய விழிப் பூட்டல் திட்டங்களில் நானும் எனது அமைப்பைச் சேர்ந்தவர்களும் இணைந்து செயற்பட்டு வருகின்றோம். மேலும் பாடசாலைக்கு செல்லக்கூடியவர்களை கல்வி கற்பிப்பதற்காக ஊக்குவிக்கின் றோம். மேலும் விசேட தேவைக்கு உட் பட்டவர்களுக்கு நான் கூறவிரும்புவது யாரும் முடங்கிக் கிடக்க வேண்டாம். எத் தனை குறைபாடுகள் உள்ளவர்களாக இருந்தாலும் சரி எங்களுக்குள்ளே திற மைகள் முடங்கி கிடக்கின்றன. அவற்றை வெளிகொணர்வதற்கு முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும். எங்களுக்கு உதவி செய்வதற்கு வழிகாட்டுவதற்கு நல்ல உள்ளம் படைத்த பலர் இருக்கின்றனர். இன்று எல்லோரும் ஒன்றுகூடி ஒற்று மையாக வேலைத்திட்டங்களை செய்வ தற்குப் பல வழிகள் இருக்கின்றன. அவ் வாறு ஒன்றிணைந்து எங்களால் எவ்வளவு செய்ய முடியுமோ அவற்றைச் செய்வோம்.

எங்களைப் பார்த்து யாரும் பரிதா பப்படும் படியாகவும் நாங்கள் பிறரிடம் கையேந்தும் நிலையையும் தவிர்த்துக் கொள்வோம். உலக நாடுகளிலே எல்லா மனிதர்களுக்கும் இருக்கின்ற சட்ட திட்டங்கள் தான் எமக்கும் உள்ளன. நீதிக்காக நியாயத்துக்காக போராட வேண்டும். எமக்கு கிடைக்க வேண்டிய வற்றை நாம் பெற்றுக்கொள்வதற்கு தயங்கக் கூடாது. ஒரு சாதாரண மனிதனுக்கு என்ன தேவையோ அவற்றை நாங்களும் தட்டிக்கேட்டுப் பெற்றுக்கொள்வோம். யாரும் இதற்குப் பின்னிற்க வேண்டாம்.

**கேள்வி: உங்கள் மணவாழ்க்கை பற்றி கூற முடியுமா?**

**பதில்:** இரண்டு கைகளையும் இழந்த என்னை அன்போடு தானாக விரும்பி எனக்கு சேவை செய்யனும் என்ற நல்ல எண்ணத்தோடு என்னை எனது மனைவி திருமணம் செய்தார் மனைவியின் பெயர் உதயமலர். எனக்கு தேவையான கடமைகள அத்தனையையும் மனம் கோணாத வகை யில் செய்துகொண்டிருக்கிறார். தற் போது எனக்கு ஏழுமாத பெண்குழந்தை ஒன்றும் உள்ளது "யானைக்கு தும்பிக்கை எவ்வளவு அவசியமோ அது போல மனி தனுக்கு நம்பிக்கை மிகவும் அவசியம். அது போல நானும் எத்தனையோ பிரச் சினைகள் இருந்தாலும் நம்பிக்கையுடன் வாழ்ந்து வருகின்றேன்.

**கேள்வி: தற்போது உங்கள் குடும்ப நிலை எவ்வாறுஉள்ளது?**

**பதில்:** எனது காணியில் என்னால் வீடு கட்ட முடியவில்லை குடிசை என்று சொல்லக்கூடிய ஒரு சிறிய இடத்தில் வாழ்ந்து வருகின்றோம் அதிலே ஒரு சிறு பகுதியை ஒரு சிறிய கடையாக அமைத் துள்ளேன். அக்கடையிலே 10,000 ரூபா வுக்கு உட்பட்ட பொருட்களை வைத்து சிறுவியாபாரத்தில் ஈடுபட்டுக்கொண்டி ருக்கின்றேன். என் காணியில் கிணறும் இல்லை. பக்கத்து வீட்டுக் கிணற்றில் தான் நீர் எடுக்க வேண்டி உள்ளது கோடை காலத்தில் நீர் வற்றிவிடும் அப்போது இரு கிலோ மீற்றர் சென்றுதான் நீர் எடுக்க வேண்டி உள்ளது. நீரை அள்ளித் தந்தால் போதும் நான் எனது பகுதிக் கைகளினா லேயே எடுத்து வந்து விடுவேன். அந்த ஒரு சிறு பகுதி கைகளினாலேயே சிறிய வேலைகளை செய்ய பழகிக்கொண்டு செய்து வருகின்றேன். எனது காணியில் ஒரு கிணறு அமைக்கபட்டு நீர் இலகுவாக கிடைக்குமாக இருந்தால் என்னுடைய எத்தனையோ இடர்பாடுகள் நீக்கப்படும். எனது பொருளாதர நிலை ஒரு கிணற்றை அமைத்துக்கொள்ளக்கூடியதாக இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் அருளும், நல்ல மனம் படைத்தவர்களின் உதவியும் இருந்தால் இது சாத்தியமாகும் என கருதுகிறேன். சுருக் கமாகச் சொன்னால் நம்பிக்கை தான் எனது வாழ்க்கையின் அத்திவாரம் என்று கூறினால் அது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

இவர் இவ்வாறு கூறி முடிக்கவும் இவரின் மனைவி தொலைபேசியில் குழந்தைக்கு சுகயீனம் வைத்திய சாலைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று கூறவும் சரியாக இருந்தது. உட னடியாகவே என்னிடம் விடைபெற்றுக் கொண்டு தன்னுடைய கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பு தந்த வலு சஞ்சிகைக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு புன் முறுவலுடன் புறப்பட்டார்.

திரு.புவிராஜசிங்கம் அவர்களின் செவ்வியை எடுத்துக் கொண்டது எனக்கு மனநிறைவைத் தந்தாலும் அவரின் கருத்துக்களைக் கேட்டபோது என்மனம் ஏனோ கனத்தது. கண்கள் கலங்கின. இருந்தாலும் இவரின் கருத்துக்கள் எத்தனையோ விசேட தேவைக்கு உட் பட்டவர்களை வழிப்படுத்தும் என்ற நம் பிக்கை மட்டும் எனக்குள் உறுதியாக உள்ளது.

நன்றி

முற்றத்து மல்லிகை பகுதிக்காக
**ஆ.பரமேஸ்வரன**
மட்டக்களப்பு

அன்பார்ந்த வாசகர்களே!

மாற்றுத்திறனாளிகள் தொடர்பாகவோ அல்லது மாற்றுத்திறனாளிகள் தொடர்பான விழிப்புணர்வை சமூகத்திற்கு ஏற்படுத்தக் கூடிய வகையில் அல்லது மாற்றுத் திறனாளிகளுக்கு நம்பிக்கை ஊட்டக் கூடியனவாக ஆக்கங்களை உங்களிடம் இருந்து எதிர்பார்க்கிறோம். எனவே உங்கள் ஆக்கங்களை கவிதையாகவோ அல்லது சிறுகதையாகவோ அல்லது கட்டுரையாகவோ அல்லது செய்தி துணுக்குகளாகவோ எமக்கு எழுதி அனுப்புங்கள் தரமான உங்கள் ஆக்கங்களை தொடர்ந்து வரும் வலுவில் இடம்பெறும் என்பதைன தெரிவித்து நிற்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதுங்கள் வெல்லுங்கள்

போட்டி இல.03 _வினாக்கள்

01. ஒரு காலை இழந்த வீரர் ஒருவர் மரதன் ஓட்டத்தின் மூலம் நிதி சேர்த்து கனேடிய புற்றுநோய் தடுப்பு சங்கத்துக்கு வழங்கினார். அவர் யார்?

02. ஐக்கிய நாடுகள் சபை வலு இழந்தோருக்கான உரிமைகளை எத்தனையாம் ஆண்டு பிரகடனப்படுத்தியது?

03. இலங்கையில் 2012ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 3பாடங்களிலும் அதிவிசேடசித்தி (3ஏ) பெற்ற பார்வையற்ற மாணவன் யார்?

04. கெலன் கெலர் எழுதிய இரு நூல்களையும் குறிப்பிடுக?

05. இலங்கையில் கண்பார்வையின் தன்மையினை அளவிடுவதற்குப் பயன்படுத்தப் படும் அட்டவணையின் பெயர் என்ன?

06. லூயில் பிறோயில் என்பவர் எத்தனையாம் ஆண்டு பிறோயில் எழுதைக் கண்டு பிடித்தார்?

07. இலங்கையில் சாதாரண பாடசாலைகளில் நுண்மதிக்குறைபாடு உடைய பிள்ளை களிற்கு என விசேட கல்வி அலகு எத்தனையாம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.?

08. மனவளர்ச்சி குன்றியோர் மட்டும் பங்குபற்றும் ஒலிம்பிக் எவ்வாறு அழைக்கப்படும்?

09. இலங்கையின் தேசிய கல்வி நிறுவகத்தில் விசேட கல்விக்கென தனியான ஒரு அலகு எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?

10. மனிதனின் எத் தொகுதியினை போலியோ வைரஸ் பெருமளவில் தாக்குகின்றது?

இவ் வினாக்களுக்குரிய சரியான விடைகளை கீழ் உள்ள புள்ளிக்கோட்டில் எழுதி அனுப்புங்கள். இப் படிவத்தில் எழுதி அனுப்பி வைக்கப்படும் விடைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

விடைகளை 30.09.2014 க்கு முன்னர் எமக்கு கிடைக்ககூடியவாறு அனுப்பி வையுங்கள். சரியான விடைகளை எழுதும் வெற்றியாளர்களுக்கு முதல் மூன்று பரிசில்களும் 10 ஆறுதறல் பரிசில்களும் வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடைகள் போட்டி இல.03

# எழுதுங்கள் வெல்லுங்கள்

01.........................................................................................

02.........................................................................................

03.........................................................................................

04.........................................................................................

05.........................................................................................

06.........................................................................................

07.........................................................................................

08.........................................................................................

09.........................................................................................

10.........................................................................................

எழுதுங்கள் வெல்லுங்கள்

**போட்டி இல.2 விடைகள்**

1. 1971
2. பிறெயில்
3. செ.துஷ்யந்தன்
4. 1912
5. பார்வை
6. செல்வி மேரி சர்ப்மன்
7. 1880 ஜூன் 27
8. திறந்த கதவுகள் ஊடான அனைவருக்குமான சமுதாயம்
9. ஜேம்ஸ் பிக்
10. சமூக சேவைகள் அமைச்சு

**அனுப்ப வேண்டிய முகவரி**
எழுதுங்கள் வெல்லுங்கள்
கருவி
மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம்
இல.1166/5 அருளம்பலம் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணக் கிண்ணம்

## ஊனத்தை வென்றிட கல்வியே வழி

மனிதா
உன் கண்கள் இரண்டும் பார்வை இழந்து
உலகைப் பார்க்க மறுத்தாலும்
நீ கல்வி பயின்று உயர்ச்சி அடைந்தால்
உலகம் உன்னைப் பார்க்குமடா.
மனிதா
உன் செவிகள் இரண்டும் கேள்மை இழந்து
இசையைக் கேட்க மறுத்தாலும்
நீ கல்வி பயின்று உயர்ச்சி அடைந்தால்
உலகம்உன்னைக் கேட்குமடா
மனிதா
உன் கால்கள் இரண்டும் செயல்கள் இழந்து
உன்னைச் சுமக்க மறுத்தாலும்
நீ கல்வி பயின்று உயர்ச்சி அடைந்தால்
உலகம் உன்னை சுமக்குமடா
மனிதா
உன் கைகள் இரண்டும் பாதிப்புற்று
எழுதப் படிக்க மறுத்தாலும்
நீ கல்வி பயின்று உயர்ச்சி அடைந்தால்
உலகம் உன் பெயர் எழுதுமடா
மனிதா
உன் உதடுகள் இரண்டும் மலர
நாவது வார்த்தை பேச மறுத்தாலும்
நீ கல்வி பயின்று உயர்ச்சி அடைந்தால்
உலகம் உன் புகழ் பேசுமடா
மனிதா
உன் மூளை கூட செயல்கள் இழந்து
உன் உயர்வை தடுத்து வைத்தாலும்
நீ கலைகள் பயின்று உயர்ச்சி அடைந்தால்
உலகம் உன்னை நினைக்குமடா.
மனிதா
உன் உடலில் உள்ள குறைகள்
ஊனங்கள் அல்ல
உடல் ஊனத்தை ஜெயித்திட
ஊனமற்ற உன் உறுதியான உள்ளத்தோடு
நீ கல்வி பயின்று உயர்ச்சி அடைந்தால்
அதுவே உனக்கு வழிகாட்டும்.

நயினையூர் நா. கீதாகிருஸ்ணன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலுவிடம் கேளுங்கள்...!

**சுரேஸ் - வல்வெட்டித்துறை**

**கேள்வி:** *அயல்வீட்டில் பள்ளி வயதை தாண்டிய பேச்சுத்திறன் குறைபாடுடைய ஒருவர் இருக்கிறார் அவர் பெற்றோரின் ஆதரவுடனேயே வாழ்ந்து வருகின்றார். அவர் சுயமாக வாழ்வதற்கு யாதேனும் வழிகள் உண்டா?*

**பதில் :** *சுரேஸின் மனப்பாங்கிற்கு வலு தலைசாய்கிறது. அவரது வாழ்க்கை பற்றி நீங்கள் சிந்தித்திருப்பது பாராட்டுவதற்குரியது. இத்தகைய நபர்களுக்கான தொழில்சார் பயிற்சிகளை வழங்கி சமூகமயப்படுத்துவதற்கு கருவி போன்ற நிறுவனங்கள் தயாராக உள்ளன. இத்தகைய நிறுவனங்களோடு தாங்கள் தொடர்பு கொண்டு அவருக்காக உதவி செய்யுங்கள்.*


**சுதாயினி: மிருசுவில்**

**கேள்வி:** *எங்கள் கிராமத்தில் இருக்கும் குடும்பம் ஒன்றின் தலைவர் யுத்த அனர்த் தத்தில் ஒரு காலை இழந்துள்ளார். முன்பு சிறந்த முன்மாதிரியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்த அந்தக் குடும்பத்தில் பிணக்குகள் தோன்றுவதை என்னால் இப்பொழுது அவ தானிக்க முடிகின்றது. இவ்வாறு பிணக்குகள் தோன்றுவதற்கு அவரது அங்க இழப்பு ஒரு காரணமாக இருக்கலாமா?*


**பதில்:** *சுதாயினி இவ்விடயத்தை ஆழமாகவும் அவதானமாகவும் நாம் நோக்கவும் கையாளவும் வேண்டும். ஒருவேளை நீங்கள் கருதுவது போலவும் இருக்கலாம் அவ்வாறு இல்லாமலும் இருக்கலாம். அவர்களது தற்போதைய குடும்ப சூழலையும் நாம் ஆராய வேண்டும். எல்லாவற்றுக்கும் முதல் முடியுமாயின் அந்தக் குடும்பத்தை பொருத்தமான உளவள துணையாளர் ஒருவரிடம் வழிப்படுத்தி அடிப்படையான உதவியை நீங்கள் செய்ய முடியும் தாங்கள் வதியும் பிரதேச செயலகத்தை அணுகினால் இந்தக் குடும்பத்துக்கு உதவக்கூடிய வழிமுறைகளைப் பெற்றுக் கொள்வீர்கள்.*

---

## சைகை மொழி



மதிய வணக்கம்



காலை வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லமை கொண்டவர் வையகமீதினில்
வளமுடன் வாழ்ந்திடும் விந்தைகள் கண்டோம்
வெற்றிகள் சாற்றிட வேங்குழல் நாதமாய்
வலுவுடன் நாமும் ஓய்விலாதுழைப்போம்

ஆற்றலால் ஆளுமை பெற்றுயர்வாகி
ஆயிரம் ஆயிரம் புதுமைகள் செய்வோம்
மானுடம் காத்திடும் மகத்துவம் எய்தி
மாதவத்தோராய் அவனியில் வாழ்வோம்





இறுவெட்டுப் பதிப்பு
ஸப்தமி கலையகம்
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
0750394989

தேவி Printers,
140/1, Manipay Road, Jaffna.
0213003030

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org